Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

தபாற் பெட்டி எண்: 49

[illegible] 389 | யாழ்ப்பாணம், பிலவ புரட்டாசி 16 ஆம் நாள் | ரபி ஆகிர் 21 | (2-10-61) | திங்கட்கிழமை | இதழ் 197

மலர்

நீங்கள் அணியும் ஆடைகள்
தூய வெண்மையாகத் திகழவேண்டுமானுல்
இன்றே!

டொலர் அடையாளமிட்ட
நீலம் வாங்கி உபயோகியுங்கள்

விநியோகஸ்தர்கள்:

டொலர் கோப்பரேஷன்

14, டாம் வீதி, கொழும்பு.

# தாராசிங் உண்ணுவிரதம் முடிந்தது!

## சீக்கியர் பற்றி உயர்தர கமிஷன் நியமனமாகும்

### அரசாங்க - அகாலி தள சமரச முயற்சி வெற்றி

புதுடில்லி, அக். 1

**பஞ்சாபி மொழி பேசும் தனிராஜ்யம் கோரி கடந்த 48 தினங்களாக உண்ணுவிரதம் இருந்து வந்த அகாலி தலைவர் மாஸ்டர் தாராசிங் இன்று மாலை தன் உண்ணுவிரதத்தை முடித்துக்கொண்டார். அதற்கடையாளமாக ஒரு கோப்பை பழச்சாறும், தேனும் அவர் அருந்தினுர்.**

தேசிய ஒற்றுமைப்பாட்டுக் கமிட்டிக் கூட்டததில் நேருஜீ இது பற்றிக் குறிப்பிடுகையில், சீக்கியர்மீது பாரபட்சம் காட்டப்படுவதாகக் கூறப்படும் புகார் பற்றி உயர்தரக்கமிஷன் ஒன்றை நியமிக்கத்தயாராய் இருப்பதாயும், ஆனல் பஞ்சாபி சுபாபற்றி இக் கமிஷன் ஆராயாது என்றும் தெரிவித்தார். பஞ்சாபி சுபாவின் சில அம்சங்களை அதில் கிளப்பலாம். அதை ஏற்பதும் நிராகரிப்பதும் கமிஷனின் பொறுப்பு. ஹிந்து—சீக்கியர் ஒத்துழைப்பின்றி பஞ்சாபின் எதிர்காலம் [illegible] இருக்காது. கமிஷன் [illegible] சீக்கிரம் அறிக் [illegible] ஆரம்பிக்கும் [illegible] நேருஜீ கூறி, உண்ணுவிரதமிருந்து வரும் சூரிய தேவுக்கும் மகாநாட்டின் செய்தியைத் தெரிவிப்பதாய்க் கூறினுர்.

பிரான்சில் முன்பு இந்திய ஸ்தானிகராகவிருந்த சர்தார் ஹர்திக்சிங்மாலிக் நேற்று அமிர்தசரசுக்குச் சென்று மாஸ்டர் தாராசிங்கையும் சன்பத்தே சிங்கையும் சந்திததுப் பேச்சுவார்த்தை நடத்தினுர். உள்நாட்டு விவகார மந்திரி திரு. லால் பகதூர் சாஸ்திரியையும் நேற்றிரவு அவர் சந்தித்துப் பேசினுர். அவருடன் பட்டியாலா மகாராஜாவும் சென்றிருந்தார்.

அமிர்தசரசிலிருந்து திரு. மாலிக் திரும்பி வந்தபொழுது மாஸ்டர் தாராசிங்கின் புதல்வி திருமதி ராஜிந்தர் கௌரும் கூடவந்திருந்தார்.

"இரு பிரிவினரும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆவல் கொண்டுள்ளனர். எனது சமாதான முயற்சி நம்பிக்கையளிக்கிறது" என்று திரு. மாலிக் நேற்றிரவு சொன்னுர்.

நேற்றிரவு சர்தார் மாலிக்குடன் பேசி முடிந்ததும் மாஸ்டர் தாராசிங் வாந்தி எடுத்தார். உடல்நிலையும் மோசமடைந்தது.

மாஸ்டர் தாராசிங்கின் உண்ணுவிரதத்துக்குப் போட்டியாக உண்ணுவிரதமிருந்துவரும் யோகிராஜ்சூரியதேவின் உடல்நிலையும் மிகமோசமடைந்துள்ளதாகவும் அவர் நேற்றிரவு நித்திரையில்லாமல் அவதிப்பட்டதாகவும் டாக்டர்களின் அறிக்கை ஒன்று தெரிவித்தது.

அகாலிதால் இயக்கத்தினருக்கும் அரசாங்கத்திற்கும் கமிஷன் நியமனம் சம்பந்தமாக இருந்த ந்ப்பபிப்பிராயம் நீங்கிவிட்டதென்று திரு. மாலிக் தெரிவித்தார்.

## கொலைவழக்கில் சாட்சியம் அளித்தவர் மயங்கி வீழ்ந்தார்

### மல்லாகம் கோர்ட்டில் சம்பவம்

மாவிட்டபுரம், சனி

மல்லாகம் நீதிமன்றத்தில் ஒரு கொலைவழக்கு விசாரணையில் சாட்சியமளித்த ஒருவர் திடீரென மூர்ச்சையடைந்து விழுந்தார். இந்நிலையில் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

மல்லாகத்தைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை கந்தையா என்பவரைக் கொலைசெய்ததாக இராமலிங்கம் கனகரத்தினம், இராமலிங்கம் சிவஞானம், துரையப்பா ஞானசேகரம், செல்லையா இரத்தினம், செல்லையா இராசதுரை, சின்னப்பு துரையப்பா ஆகிய ஆறுபேர் மீது சுன்னுகம் பொலிசாரால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தம்பிப்பிள்ளை கனகரத்தினம் என்பவர் வழக்காளி தரப்பில் முதலில் சாட்சியமளித்தார். இதற்கடுத்ததாக முதலாவது சாட்சியின் தம்பியான மல்லாகத்தைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை நடராசா (கொலைசெய்யப்பட்ட தம்பிப்பிள்ளை கந்தையாவின் தம்பி) சாட்சியமளிக்கையில் பின்வருமாறு தெரிவித்தார்.

கொலைசெய்யப்பட்ட கந்தையா எனது அண்ணன். 12-8-61-ம் திகதி நான் சுமார் 3 மணியளவில் எனது காரில் வந்து மணியம் கடைக்கு முன்னல் காரை நிறுத்திவிட்டு காரில் இருந்து இறங்கினேன். அப்பொழுது முதலாவது எதிரியும் நான்காவது எதிரியும் எனது அண்ணன் கந்தையாவை இரும்புக்கம்பியால் அடித்தனர். அவ்வேளையில் 2வது எதிரியும் 3 வது எதிரியும் எனது மற்ற அண்ணன் கனகரத்தினத்தை இரும்பால் அடித்தனர். பின்னர் 3 வது எதிரி ஒரு கதிரையை எடுத்து எனது அண்ணர் கனகரத்தினத்தை அடித்தார். அண்ணன் கனகரத்தினத்தை ஏன் அடிக்கின்றீர்கள்"? என நான் 3-ம் 4-ம் எதிரிகளைக் கேட்டபோது 4-ம் எதிரி இரும்புக்கம்பியால் தாக்கினுர்.

இச்சமயம் சாட்சி அறிவிழுந்து கீழே விழவே வழக்கை நீதிபதி இம்மாதம் 5ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## 'சமுகத்தில் பல பெரியார்கள் தோன்றவேண்டும்'

### ஆசிரியர்சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"சமுகத்துக்குப்பணியாற்றக் கூடிய பெரியோர்கள் எமது சமுகத்தில் பலர் தோன்றவேண்டும். உயர்ந்த லட்சியமுடையவர்களாக இவ் விருவரும் அமைந்தமையினுல் அந்த இலட்சியம் இவர்களை முன்னேற்றப்பாதையில் அடியெடுத்து வைக்க உதவுகின்றது. உயர்ந்த மனப்பான்மை இவர்களை உன்னத நிலைக்குஉயர்த்துகின்றது. பரந்த எண்ணம் இவர்கள் பண்புடைமையை விளக்குகின்றது. இளைஞராகிய இவர்கள் அன்புடமை இவ்வளவு சனங்களின் மனங்களையும் கவர்ந்துள்ளது"

இவ்வாறு திரு. கு. வி. செல்லத்துரை அ. இ. த. ஆ. சங்க யாழ்ப்பாணக் கிளையில் 26 வது வருடாந்தக் கூட்டத்தில் பேசும் போது கூறினுர்.

உள்ளூராட்சி உறுப்பினர்களான திரு. அழகையா, திரு வேலாயுதர் ஆகிய இருவர்களின் சேவை நலன்களையும் பாராட்டிப்பேசும்போதே அவர் அவ்வாறு தெரிவித்தார். இக்கூட்டம் திருமதி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது.

காரியதரிசியால் சென்ற கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டது.

பொருளாதிக்கை, தனதிகாரியால் வாசிக்கப்பட்டது. புது வருடத்துக்கான உத்தியோகஸ்தர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு க. பே. [illegible]தையா

உபதலைவர்கள்: திருமதி பு. பொன்னம்பலம், திரு. மு. பொன்னுத்துரை, திரு. இ. வேலாயுதர்.

## இன்று

இன்று மாலை 6 மணிக்கு யாழ்ப்பாண நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கும் சுவாமி சிவானந்த மகரிஷியின் ஜயந்தி விழாவில் சுவாமி சச்சிதானந்தா கலந்துகொள்வார்கள். வேறும் பல அறிஞர்உரைநிகழ்த்துவார்கள்.

---

கொழும்பு, ஞாயிறு

நாளை பொலனறுவையிலும் ஹிங்குராக் கொடையிலும் இரு மக்கள் வங்கிக் கிளைகளை சாணி மந்திரி திரு. ஸி.பி. டி' சில்வா திறந்துவைப்பார்.

## புது வருட நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சரித்திர குடியியல் சங்கக் கூட்டமொன்று நடைபெற்றது. பின்வருவோர் புது வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: க. தில்லைச்சிற்றம்பலம், உபதலைவர்: சு. தேவதாஸ், காரியதரிசி: சு. பசுபதிப்பிள்ளை, உபகாரியதரிசியும், தனதிகாரியும்: அ. ரவீந்திரன், பத்திராதிபர்: செல்வி சு. பவானி.

---

## ரூ. 2000பெறுமதியான வேப்பம் பலகைகள் கைப்பற்றப்பட்டன

யாழ்ப்பாணம், ஞாயிறு

வேப்பம் பலகையை ஏற்றிச்சென்ற 22 ஸ்ரீ 662 இலக்கமுடைய லொறியையும் சாரதியையும், வேப்பம்பலகைகளைப் பறிமுதல்செய்துவிட்டு, பிணையில் விடுதலை செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அப்பலகைகள் சுமார்ரூ 2000 பெறுமதியிருக்குமெனச் சொல்லப்படுகிறது.

தகவல் கிடைத்ததன்பேரில் மாவட்ட வனபரிபாலன அதிபர் திரு. இரத்தினமும் உதவி வனபரிபாலன அதிபர் எஸ். ஏ. மனுவேல், காட்டு உடையார் திரு. எஸ். குழந்தைவேலு ஆகியோர் காரைதீவில் மறைந்திருந்து இவற்றைக் கைப்பற்றி சாவகச்சேரி அரசினர் மரக்காலையில் ஒப்படைத்தனர் எனத் தெரிகிறது.

## ஈழத்து எழுத்தாளர் மகாநாடு

### கூட்டுவதற்கு முயற்சி

ஏழாலை, ஞாயிறு

ஈழத்து எழுத்தாளர் மாநாடொன்றை மிகவிரைவில் கூட்டுவதெனவும அதற்கான நடவடிக்கைகளை உடனே மேற்கொள்ளுவதென்றும் ஏழாலை சனசமுக நிலையத்தின் கூட்டத்தில்முடிவுசெய்யப்பட்டுள்ளது

கூட்டத்துக்கு திரு. கே.குணசிங்கம் தலைமை தாங்கினுர்.

## 13 மைல் நீள ரஸ்தா வேலை

கொழும்பு, ஞாயிறு

மொரவக்கையிலிருந்து 13 மைல் நீள ரஸ்தா அமைக்கும் வேலை துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

## தமிழ்நிர்வாகத்தைத் துரிதப்படுத்த இருதமிழ் மொழிபெயர்ப்பாளர்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மாநகரசபையின் தமிழ் மொழி நிர்வாகத்தைத் துரிதப்படுத்தும் நடவடிக்கையாக இரண்டு தமிழ் மொழி பெயர்ப்பாளர்களை உடனடியாக நியமனஞ் செய்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

மாநகரசபை நிதிக்கமிட்டிக் கூட்டம் மேயர் திரு. டி. எஸ். துரைராசா தலைமையில் நடைபெற்றபோது மேற்கண்ட முடிவு செய்யப்பட்டது.

ஸ்தலஸ்தாபனக் கமிஷன் இந்த நியமனங்களை அங்கீகரிக்கும்வரை தற்காலிகமாக இவர்களை அமர்த்தித் தமிழ் நிர்வாகத்தைத் துரிதப்படுத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

இவர்களை அமர்த்துவதற்கான நடவடிக்கைகளை மாநகரசபை மேற்கொண்டிருக்கிறது.

## டாக்டர் - சுதேச வைத்தியர் ஒத்துழைப்பு

### உலகுக்கு ஒருமகத்தான தொண்டு

கொழும்பு, ஞாயிறு

"மேல்நாட்டு வைத்தியங்களைச் செய்து வரும் டாக்டர்கள் தமது நன்மைக்காகவே ஆயுள்வேத வைத்திய முறைகளையும் கற்றுக்கொள்ளலாம்."

இவ்வாறு அகில இலங்கை ஆயுள்வேத வைத்தியக் காங்கிரஸ் தலைவர் திரு. ஒவிட்டிகல குணசேகரா ஆயுள்வேத காங்கிரஸின் 33-வது வரு

(5ம்பக்கம் பார்க்க)






உ
சிவமயம்

**ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தான**
**கோடியர்ச்சனை விஞ்ஞாபனம்**

**ஆரம்ப தினம்: 23—10—61**
**பூர்த்தி தினம்: 5—2—62**

இந்த அர்ச்சனையில் யந்திரத் தகடு வைத்து பூஜை செய்து கொடுக்கப்படும்.

சி. பாலசுப்ரமணியக் குருக்கள்.



## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்ளடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

**வைத்தியர் பரிபூரணாநந்தர்,**
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.



## ஆயுள்வேத அரிய சாதனை

புற்று நோய்க்கு **'யோகீஸ்வர ரசம்'** தமிழ்வைத்தியமுறைப்படி புற்று நோயை வேரறுக்க முடியுமென்பதை செயல்மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டோர் எம்மிடம் சிகிச்சை பெற்றுக் குணமடைநதுளர். தாய்க்குலத்தாருக்கு ஒரு வரப்பிரசாதமாக கிடைத்துள்ள அரிய மருந்து **பெரும்பாடு நிவாரணி."** தாமதமின்றிக் கலந்தாலோசியுங்கள்.

**பொ. செல்லையா**
ஆயுள்வேத வைத்தியர்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.








**வியாபாரம்பெருக**
**விளம்பரம்செய்க**


## அறிவித்தல்

கே. கே. எஸ். வீதியில் 424ம் இல்லத்தில் வசிக்கும் **திரு. நமசிவாயம்** எங்களது ஸெகியூரிட்டி அன் சேவிஸ் அஸோசியேஷனின் வடமாகாண பிரதேச நடவடிக்கை உத்தியோகஸ்தராக இம்மாதம் 23-ந் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார். என்பதை இத்தால் தெரிவித்துக்கொள்கிறோம். **நா. தி. பிருன்ஸிஸ் ஸேவியர்,** அத்தியட்சகர், Insureds' Security & Service Association of Ceylon Ltd.

## இசைஞானம்மட்டும் போதாது
### பக்திச்சுவையும் அவசியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
"இன்று தேவார திருவாசகம் திருப்புகழ் என்பனவற்றைப் பக்திச் சுவையுடனும் பொருளுணர்ச்சியுடனும் இசை பாவத்துடனும் பாடியதைக் கேட்டு இன்புற்றோம். பாடல்களைப் பாடுவதற்குத் தனியே இசைஞானம்மட்டும்இருந்தால் போதாது. பாடலுக்கேற்ற பாவமும் உணர்ச்சியும் பக்தியும் இன்றியமையாதனவென்பதை இன்றைய இசைவிருந்து எமக்கு உணர்த்தியுள்ளது. பாடகருக்கேற்ற பான்மையில் பக்கவாத்தியங்கள் தக்க அனுசரணையாயிருந்தன வென்பதையும் பாராட்டாமல் விட முடியாது."

மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் கோவிலில் மானிப்பாய் இந்துசமயவிருத்திச் சங்க ஆதரவில் நடைபெற்ற திருநாளைப்போவார் திருநாள் வைபவத்தையொட்டி நடைபெற்ற இசைவிருந்தைப்பற்றிக் குறிப்பிடும்போது இந்து சமய விருத்திச் சங்கத் தலைவர் திரு. மு. வைரமுத்து ஜே. பி. மேற்கண்டவாறு கூறினர். இசைப் புலவர் திரு சி. செல்லத்துரை இசைவிருந்தளித்தார். பிரம்மஸ்ரீ எஸ். வைத்தீஸ்வர ஐயர் (வயலின்) திரு. பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை (முகவீணை) திரு வி. அம்பலவாணர் (மிருதங்கம்( களக்காடு திரு. குமுக்கா கணபதி (கெஞ்சிரா)பக்கவாத்தியம் வாசித்தனர். திரு. மு. வயிரமுத்து திருநாளைப்போவார் பற்றி அரியதோர் சொற்பொழிவாற்றினர். கூட்டுயபிரார்த்தனையும் பூசையும் சிறப்பாக நடைபெற்றன.

# தொழில் கோர்ட்டுக்கு
## மேலதிகமான அதிகாரம்
### மந்திரி புதியசட்டம் கொண்டுவருகிறார்

கொழும்பு, ஞாயிறு
தனியார் துறைகளில் கடமையாற்றும் தொழிலாளரின் 'போனஸ்' சேவைக் கால உபகாரப் பணம் யாட் குறைப்பு ஆகியவற்றின் மீது தொழில் 'கோர்ட்' டுகளுக்கும் தொழில் தகராறு மத்தியஸ்த சபைக்கும் மேலதிகமான அதிகாரம் வழங்குவதற்கான புதிய சட்டங்களை தொழில் மந்திரி திரு. எம். பி. டி. ஸற். சிறிவர்த்தன பாாலிமெண்டில் விரைவில் சமர்ப்பிக்க விருக்கிறார். புதிய சட்டங்களின் நோக்கங்கள் வருமாறு:

**'போனஸ்'**

சேவைக்காலஉபகாரப்பணம் அல்லது போனஸ் தேவைப்படும் தொழிலாளருக்கு அவை வழங்கப்படாத சமயங்களில் அவற்றை வழங்கும்படி கட்டளையிடுவதற்குத் தொழில் கோர்ட்டுக்கு அதிகாரம் இருக்க வேண்டும் என்பதற்காக இச் சட்டம் நிறைவேற்றப்படவிருக்கிறது. தொழில் கோர்ட்டில் இப்போதுள்ள நியதியின்படி போனஸ்ஸுகள்கயாவும் நல்நடத்தை வேதனமாக வழங்கப்படும் பணமாகவே கருதப்படுகின்றன. இப்போதுள்ள நியதியின்படி தொழிலாளருக்கு போனஸில் சட்டபூர்வமான உரிமை எதுவும் இல்லை.

இப்போது உள்ள சேவைகால உபகாரப் பணத்திற்கான சட்டத்தின் கீழ் தொழில் தகராறு மத்தியஸ்த சபைக்கு எதுவித அதிகாரமுமில்லை. இப்பணத்தை வழங்கும்படி தொழில் தகராறு மத்தியஸ்த சபை முதலாளிகளைக் கேட்டுக்கொள்ள முடியாது. ஆட்குறைப்பு காலங்களில் ஒப்பந்தம் எதுவும் செய்யப் படாதிருந்தால் தொழில் கோர்டு சமுக நீதியின்படி, தொழிலாளருக்கு உபகாரச் சம்பளம் வழங்கும்படி முதலாளிகளைக் கேட்டுக்கொள்ள முடியாது.

இந்த சேவைக்கால உபகாரப் பணச்சட்டம்பற்றிவிதி 31 B (1) என்பதனுல் குறிப்பிடப்பட்டுள்ளது. புதிய சட்டத்தினுல் இதுவும் மாற்றியமைக்ககப்படவிருக்கிறது.

புதிய சட்டத்தினுல் சேவைக் கால உபகாரப்பணம் வழங்கும்படி கட்டளை யிடுவதற்கும் பென்ஷன் வழங்கும்படி கேட்டுக் கொள்வதற்கும் அதிகாரம் அளிக்கப்படவிருக்கிறது. தொழில் கோர்ட்டுக்கு இவ்வுரிமை சட்டபூர்வமாக இல்லாதிருந்து சேவைக்கால உபகாரப் பணம் வழங்கும்படி கேட்டதற்காக தொழில் கோர்டை சுப்ரீம்கோட் குறை கூறியது. இது அண்மையில் நடைபெற்ற சம்பவமாகும்.

25 க்கு மேற்பட்ட தொழிலாளர் உள்ள வேலைஸ்தலங்களில் தான் ஒரு ஆண்டுக்கு மேற்பட்ட காலத்துக்கு சேவையாற்றிய தொழிலாளர் எவரையும் வேலைநீக்கம் செய்யலாம் என்னும் புதிய சட்டம் மாற்றியமைக்கப்படும். வேலைநீக்கம் செய்யமுன்னர் ஒரு மாதகால முன்னறிவித்தல் கொடுக்கப்படல் வேண்டும் எனும் சட்டம்புதிதாகஅமைக்கபபடவிருக்கிறது. இப்போதுள்ள நியதியின்படி முதலளிகள் தாம் விரும்பியபடி தொழிலாளரை வேலைநீக்கம் செய்யலாம்.

மத்தியஸ்தகராக நின்று தகராறுக்களை நீக்குவதற்குப் புதிய சட்டத்தால் தொழில் அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்படும்.

## யாழ்ப்பாணத்தில் சாரணர் அணிவகுப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு
யாழ்ப்பாணத்திலுள்ள பல பள்ளிக்கூடங்களைச் சேர்ந்த சாரணர் படைகளின் முகாமும் விளையாட்டுகளும்சென்றவியாழக்கிழமை முதல் சனிக்கிழமை வரை யாழ்ப்பாணம் பழைய பூங்கா மைதானத்தில் நடைபெற்றது. ஏராளமான சாரணர் கலந்துகொண்டு, சிறிய கூடாரங்களும் அமைத்து பல விளையாட்டுகளிலும் ஈடுபட்டனர்.

வெள்ளிக்கிழமை சாரணக் கமிஷனர் கர்னல் டி. எல். ஜயவர்த்தனவை வரவேற்று அணிவகுப்பு நடத்தினர். கர்னல் சாரணர்களைப் பாராட்டிப் பேசுகையில் இன்னும் 4 மாதங்களில் கொழும்பிலே சாரணர் ஜம்பூரி நடப்பதாயும் அதில் யாழ்ப்பாணமும் கலந்துகொண்டு அதன் பெருமையை நிலைநாட்டுமென்று நம்புவதாயும் சொன்னர். பின்னர் பல விளையாட்டுகளிலும் திறமையானவர்களுக்குப் பரிசுப் பத்திரங்களை வழங்கினர்.

## "கொள்ளை இலாபத்துக்கு இன்று இடமில்லை"

உடுப்பிட்டி, ஞாயிறு
"சட்டங்கள் நிரந்தரமற்றவை. மனிதனின் நேர்மையே இன்று சிறந்ததாகும். இன்றைய நிலையில் கைலஞ்சம் முதலிய ஊழல்களுக்கு இடமில்லை."

இவ்வாறு வடமாகாண உணவுக் கட்டுப்பாட்டதிகாம் திரு. கே. சிவப்பிரகாசரி வெள்ளிக்கிழமை பிற்பகல் நெல்லியடியில் நடைபெற்ற கட்டைவேலிப் பற்றுவர்த்தக சங்கத்தில் உரை நிகழ்த்துகையிற் குறிப்பிட்டார். திரு. கே. ஞானசுப்பிரமணியத்தின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:

'வர்த்தகர்கள்சமுதாயத்தின் புல்லுருவிகள் என்ற அபிப்பிராயம் மாறி அவர்கள் சமுதாயத்தின் இன்றியமையாத ஊழியர் என்ற மனப்பான்மை உருவாக வேண்டும். கைலஞ்சம் பெறும் வர்த்தகர் அல்லாத அரசாங்க ஊழியர் வர்த்தக சங்கத்தில் இடம்பெறுதல் தடுக்கப்படல் வேண்டும். இன்றைய கால கட்டத்தில் கொள்ளை இலாபம் பெறும் வர்த்தகருக்கு இடமில்லை. கொஞ்ச இலாபம் கருதிப் பொருட்களைக் கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக விற்போர் கடுமையான தண்டனைகளுக்கு ஆளாக வேண்டும். உயர்நீதி மன்றத்திற்கும் இவ்வாருன வழக்குத் தீர்ப்புகளை அப்பீல் செய்ய முடியாது.'

## வடமராட்சி வலைப்பந்தாட்டப் போட்டி

உடுப்பிட்டி, சனி
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் மகளிர் கல்லூரி மேற்பிரிவு மாணவிகள் கோஷ்டிக்கும், பருத்தித்துறைமெதடிஸ்த மிஷன் மகளிர் கல்லூரி மேற்பிரிவு மாணவிகள் கோஷ்டிக்கும் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டி [illegible] டின [illegible] மாணவிகளுக்கிடையே [illegible] பெற்ற போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த கல்லூரி வெற்றியீட்டியது.


# வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கம்

(வரைவுள்ளது)

**1933ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.**

30 வயதுக்கு மேற்படாத சகல பாடசாலைகளிலுமுள்ள நிரந்தர ஆசிரியர் எவரும் அங்கத்தவராய்ச் சேரத் தகுதியுடையர்.

அங்கத்தவராகச் சேராதிருப்பவர்கள் சேர்ந்து தங்களுக்கும் தங்களில் தங்கியிருப்பவர்களுக்கும் சேமிப்பைத்தேடவும்.

அங்கத்தவராகச் சேர விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்தில் உரிய பத்திரங்களையோ தகவல்களையோ பெற்றுக் கொள்ளலாம்.

**1-1-61ல் அங்கத்தவர்கள் தொகை - 963**
**1-1-63ல் இருப்பு ரூபா 2,90,535/67**
**1960ல் இறந்த அல்லது இளைப்பாறிய அங்கத்தவர்களுக்குச் சகாயமாக உதவிய தொகை - 23,115/50**

**1960ல் இளைப்பாறிய ஒருவர் பெற்ற தொகை:**

| பெயர். | வகுப்பு. | திருப்பிக்கொடுத்த கட்டணப் பணம். ரூ. ச. | சகாயம். ரூ. ச. | மொத்தம் ரூ. ச. |
|---|---|---|---|---|
| எஸ். ஏச். பேரின்பநாயகம் | 1 | 1092 00 | 2221 00 | 3313 00 |

**1960ல் இறந்தவர் ஒருவர் பெற்ற தொகை:**

| பெயர். | வகுப்பு. | திருப்பிக் கொடுத்த கட்டணப் பணம். | சகாயம். | மொத்தம். |
|---|---|---|---|---|
| பி. இராமுப்பிள்ளை | 1 | 201-58 | 2592-00 | 2793-58 |

காரியதரிசி
வட மாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கம்
19, பழம் ரோட்டு, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

# ஐ. நா. வில் சிரியா அங்கத்துவம் கோருகிறது

## எகிப்துடன் நட்புறவு கொள்ள விருப்பம்

டமாஸ்கஸ், அக். 1

சிரியா குடியரசை மீண்டும் ஐ. நா. வில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சிரியா மனுச் செய்துள்ளது.

ஐ. நா. சபைத் தலைவர்களுக்கும் ஐ. நா. அங்கத்துவநாடுகளுக்கும் இந்த மனுவின் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளன.

அரபுலீக்கிலும் சிரியா அங்கத்துவம்கோரி மனுச்செய்துள்ளது.

சிரியாவின் புதிய அரசாங்கத்தை ஈரானும் அங்கீகரிக்க முடிவுசெய்துள்ளது.

கெய்ரோவுக்கும் டமாஸ்கஸுக்குமுள்ள தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்டுள்ளன. டமாஸ்கஸ்ஸில் டாங்கிகளும் கவசமோட்டார்களும் வீதிகளில் வலம்வந்துகொண்டிருக்கின்றன.

டமாஸ்கஸ்ஸில் அரசாங்க ஊழியர்கள் எல்லோரும் நேற்று வேலைக்குத் திரும்பிவிட்டனர்.

டமாஸ்கஸ்ஸிலுள்ள எகிப்து இராணுவத்தைச் சேர்ந்தவர்களும் அரசாங்க தலைமைக் காரியாலயத்துக்கு நேரில் ஆஜராகும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவர்களும் இவர்களது குடும்பங்களும் எகிப்துக்குத் திருப்பி அனுப்பப்படவிருக்கிறார்கள்.

### கெய்ரோ ரேடியோ தகவல்

டமாஸ்கஸ்ஸிலும் மற்றும் சிறிய நகரங்களிலும் சிரியாவின் புதிய அரசாங்கத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதாக கெய்ரோ ரேடியோ தெரிவித்தது.

கெய்ரோவில் ஜனாதிபதி நாஸருக்கு ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

எகிப்துடன் நட்புறவுடன் வாழவிரும்புவதாக சிரியாவின் புதிய அரசாங்கம் தெரிவித்துள்ளது. அரபு ஐக்கியத்துக்கு புதிய சிரியா அரசாங்கம் உழைக்குமென்றும் டமாஸ்கஸ் வானொலி அறிவித்தது.

சிரியாவின் புதிய அரசாங்கத்தை ஆதரித்து நடைபெறும் ஆர்ப்பாட்டங்களை நிறுத்திக்கொள்ளுமாறும் இது மற்றவர்கள் தவறான பிரசாரம் செய்ய பயன்படக்கூடுமென்றும் புதிய அரசாங்கம் கேட்டுக்கொண்டது.

## இம்மாத இறுதியில் மார்கிரெட்டுக்கு குழந்தை

லண்டன், ஞாயிறு

எலிஸபெத் மகாராணியின் இளைய சகோதரி மார்கிரெட் இளவரசிக்குப் பிறக்கப்போகும் குழந்தை லண்டனிலுள்ள கிளாரெனஸ் ஹவுஸில் பிறக்கும் என அதிகாரபூர்வமான வட்டாரங்கள் கூறியுள்ளன. மார்கிரெட் இளவரசிக்கு அக்டோபர்மாத இறுதிவரையில் குழந்தை யிறக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கென்யாட்டாவுக்கு எதிர்ப்பு

நைரோபி, அக். 1

ஆபிரிக்க விடுதலை வீரர் திரு. ஜோமோ கென்யாட்டாவை தமது கட்சிக்குத் தலைமை தாங்கும்படி கென்யா ஆபிரிக்க தேசிய யூனியன் கேட்டுள்ளது. கென்யாவின் மற்றொரு அரசியல் கட்சியான கென்யா ஆபிரிக்க ஜனநாயக யூனியன் இதை எதிர்த்துள்ளது. திரு. ஜோமோ கென்யாட்டாவை ஜனநாயக யூனியன் பகிரங்கமாக எதிர்த்துப் பிரசாரம் செய்யத் தொடங்கியுள்ளது.

## குரோமிக்கோ – டீன் மீண்டும் சந்திப்பு

### பயனுள்ள பேச்சுவார்த்தை

நியுயோர்க், அக். 1

சோவியத் வெளி விவகார மந்திரி திரு. குரோமிக்கோவும் அமெரிக்க வெளி விவகார மந்திரி திரு. டீன்றஸ்க்கும் நேற்று மூன்றாவது தடவையாகச் சந்தித்து பெர்லின், ஜெர்மன் பிரச்னை சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

தங்கள் சந்திப்பு பயனுள்ளதாகவிருந்ததென்று திரு. டீன்றஸ்க் பின்னர் தெரிவித்தார்.

திரு. குரோமிக்கோ அடுத்த தடவை வாஷிங்டனுக்குச் செல்லும்பொழுது ஜனாதிபதி கென்னடியைச் சந்தித்துப் பேசுவாரென அறிவிக்கப்பட்டது.

## நேரு மெக்சிகோ செல்வார்

புதுடில்லி, செப். 30

பிரதமமந்திரி நேரு வருகிற நவம்பர்மாதம் அமெரிக்கா செல்லும் போது மெக்ஸிகோவுக்கும் விஜயம் செய்வார். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அழைப்பிற்கிணங்க அவர் லண்டனிலும் சில தினங்கள் தங்கி பிரதமர் மாக்மிலனுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்.

## விமான நிலைய ஒலிப்பதிவு கருவி பழுதடைந்தது உண்மையா?

### ஹமர்ஷீல்டின் கைப்பை ரொடீஷியாவில் இருக்கிறதாம்!

லியப்போல்ட்வில்லி, அக். 1

விமானவிபத்தில் சிக்கி உயிரிழந்த ஐ. நா. பொதுக்காரியதரிசி திரு. டாக் ஹமர்ஷீல்டின் கைப்பைக்குள்ளிருந்த காங்கோ சம்பந்தமான முக்கிய தஸ்தாவேஜுகளை ரொடீஷிய சம்மேளன அரசாங்க அதிகாரிகள் கைப்பற்றிச்சென்றுபுகைப்படப்பிரதிகள் எடுத்துள்ளதாக ஐ. நா. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

திரு. ஹமர்ஷீல்டின் கைப்பையைப்பற்றி தமக்கு ஒன்றுமே தெரியாது என முன்னர் கூறிய ரொடீஷிய அரசாங்க அதிகாரிகள் இப்பொழுதுஅது தங்களிடமுள்ளதாகவும் அதை திருப்பிக்கொடுக்க விரும்புவதாகவும் தெரிவித்துள்ளனர்.

### பழுதடைந்தது உண்மையா?

திரு. ஹமர்ஷீல்ட் பிரயாணம் செய்த விமானத்தின் விமானி என்டோலா விமான நிலையத்திலுள்ள கட்டுப்பாட்டு சாதன அறையிலுள்ள அதிகாரிக்கு எவ்வித தகவல் கொடுத்தார்? உதவி ஏதும்கோரினாரா? விமானத்தின் நிலைமை எதையும் தெரிவித்தாரா? என்பதை அறிந்துகொள்ளமுடியாமலிருக்கிறதாம். அந்த அறையிலுள்ள ஒலிப்பதிவுக்கருவி பழுதடைந்திருந்ததால் விமானியும் அறையிலிருந்த அதிகாரியும் பேசிக்கொண்டவைகள் அதில் பதிவு செய்யப்படவில்லை என்று விமானநிலைய அதிகாரிகள் இப்பொழுது தெரிவித்துள்ளனராம்.

ஒலிப்பதிவுக் கருவியில் எதுவும் பதிவுசெய்யப்பட்டிருக்காததால் விபத்து பற்றி விசாரணைசெய்யும் விசாரணைக் கமிஷன்களுக்கு சிரமமேற்பட்டுள்ளதென்று தெரிவிக்கப்படுகிறது.

ஒலிப்பதிவுக் கருவியில் விமானி தெரிவித்த தகவல்கள் பதிவுசெய்யப்பட்டிருக்கலாமென்றும் அவை இப்பொழுது அழிக்கப்பட்டிருக்கக்கூடுமென்றும் காங்கோவிலுள்ள ஐ. நா. வட்டாரங்கள் கருதுகின்றன.

## சென்னை கார்ப்பரேஷன் 72-வது தினம்

சென்னை, செப். 30

நேற்று சென்னைக் கார்ப்பரேஷன் 72-வது வருடாந்த தினம் கொண்டாடப்பட்டது. பிரதமர் நேரு உட்பட பலர் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தனர்.

## இந்தியா 330 கோடி டாலர் கடன் கோரும்

புதுடில்லி, செப். 29

இந்தியாவுக்கு உதவும் நாடுகள் அடுத்த முறை சந்திக்கும் போது இந்தியா மேலும் 330 கோடி டாலர் கடன் கோரும் என அறிவிக்கப்படுகிறது.

## தோட்டப்பகுதிக்கு ககாரின்

### அழைப்பதற்கு முயற்சி

புசல்லாவை, சனி

இலங்கைக்கு வரவிருக்கும் சோவியத் ரஷ்ய முதலாவது வானவெளி வீரர் மேஜர் யூரி ககாரினைப் புசல்லாவைக்கு அழைத்து அவருக்கு மலைநாட்டில் வாழும் தோட்டத் தொழிலாளர்கள் சார்பில் பொதுவரவேற்பு அளிப்பதெனச் சில தொழிலாளர்கள் முயற்சி செய்து வருகின்றனர்.

இதுசம்பந்தமாக இலங்கையில் உள்ள சோவியத் ரஷ்ய தூதர், கல்வி அமைச்சர், பீட்டர் கெனமன் ஆகியோரின் உதவியை நாடுவதெனத் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

## ஷோம்பேயின் பிரதிநிதி காங்கோ செல்கிறார்

எலிஸபெத்வில்லி, அக். 1

காங்கோ மத்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக கடாங்காவிலிருந்து தூதுவர் ஒருவரை அனுப்பிவைக்கப் போவதாக கடாங்கா அதிபர் திரு. ஷோம்பே நேற்று பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

காங்கோ மத்திய அரசாங்கப் பிரதமர் திரு. அடௌலாவை தாம் சந்தித்துப் பேசுவதற்கு ஆவலுடனிருப்பதாகவும் திரு. ஷோம்பே கூறினார்.

கடாங்காவில் பணத்துக்காக வேலை செய்யும் அந்நிய அதிகாரிகள் பற்றி ஒரு நிருபர் கேட்ட பொழுது, "பணத்துக்காக வேலைசெய்யும் அந்நியர் இனி கடாங்காவில் ஒரு பிரச்சினையேயல்ல" என்று திரு. ஷோம்பே சொன்னார். "அவர்களுக்குப் பணத்தைக் கொடுத்து நன்றிகூறி அவர்களைத் தங்கள் தாய்நாட்டுக்குச் செல்லும்படி கூறிவிட்டோம்" என்று அவர் கூறினார். அந்நிய அதிகாரிகளை கடாங்காவிலிருந்து வெளியேற்றுவதுபற்றி திரு. ஷோம்பே ஒன்றும் கூறவில்லை. கடாங்காவிலிருந்து அந்நிய அதிகாரிகளை வெளியேற்றும்படி காங்கோவிலுள்ள ஐ. நா. அதிபர்கள் ஷோம்பேயை வற்புறுத்தியுள்ளனர்.

## பழைய நிலைகளுக்கு துருப்புகள் திரும்புகின்றன

### பிஸர்ட்டா நிலைமை முன்னேற்றம்

டூனிஸ், அக். 1.

டூனிஸியாவில் பிஸர்ட்டா சம்பந்தமாக சண்டை தொடங்குவதற்கு முன் பிரஞ்சு துருப்புக்கள் இருந்த பழைய நிலைகளுக்கு பிரஞ்சு துருப்புக்கள் திரும்பிச்செல்லும் நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகின்றன.

டூனிஸியாவிலுள்ள பிஸர்ட்டா கடற்படைத் தளத்திலிருந்து பிரஞ்சு துருப்புக்கள் வெளியேறவேண்டுமென டூனிஸியா பிரான்சைக் கேட்டிருந்தது. இதற்கு பிரான்ஸ் ஒப்புக்கொள்ள மறுக்கவே தளத்திலுள்ள பிரஞ்சுத்துருப்புக்கள் வெளியே நடமாடமுடியாமலும் அவர்களுக்கு உணவு, தண்ணீர் முதலியவைகள் செல்லாமலும் சாலைகள் தடுப்பு நடவடிக்கையை டூனிஸிய அரசாங்கம் மேற்கொண்டது. இச்சமயம் பிரஞ்சு துருப்புகளுக்கும் டூனிஸியத்துருப்புகளுக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து பிரான்ஸிலிருந்து மேலும் துருப்புக்கள் பிஸர்ட்டாவுக்கு வந்து சேர்ந்தன. பிஸர்ட்டா நகரத்தின் பல பகுதிகளையும் பிரஞ்சுபடைகள் தம்வசப்படுத்தின. சகாராவின் சில பகுதிகளை டூனிஸியபடைகள் நிலைகொண்டன.

பிஸர்ட்டா நிலைபற்றி விவாதித்த பாதுகாப்புச் சபையின் அவசரக் கூட்டம் பிஸர்ட்டாவில் உடனடியாக இருதரப்பினரும் சண்டையை நிறுத்திக்கொள்ள வேண்டுமென்றும் சண்டை ஏற்படுவதற்கு முன்னிருந்த நிலைகளுக்கு இருபகுதித் துருப்புக்களும் திரும்பிவிட வேண்டுமென்றும் ஒரு தீர்மானத்தின் மூலம் பாதுகாப்புச் சபை உத்தரவிட்டது.

சண்டைநிறுத்தம் உடனடியாக ஏற்பட்டது. ஆனால் துருப்புக்கள் பழைய நிலைகளுக்குத் திரும்புவதில் உடன்பாடு ஏற்படவில்லை. இருதரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்தியபின் இப்பொழுது இருபகுதித் துருப்புக்களும்பழையநிலைகளுக்குத் திரும்பும் வேலைகள் இன்று ஆரம்பமாகின்றன.

## கராச்சியில் கருவாட்டு தூதுகோஷ்டி

கராச்சி, அக். 1

பாகிஸ்தானிலிருந்து கருவாடு இறக்குமதி செய்வது சம்பந்தமாக பாகிஸ்தானில் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இலங்கைக் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தைச் சேர்ந்த மூன்று அங்கத்தவர் கமிட்டியொன்று நேற்று கராச்சிக்கு வந்து சேர்ந்தது.

## சுவீடனின் 5 'ஜெட்' விமானங்கள்

ஸ்டாக்ஹோம், அக். 1

காங்கோவிலுள்ள ஐ. நா. படைக்கு உதவி புரிவதற்காக சுவீடன் 5 'ஜெட்' போர் விமானங்களை நேற்று அனுப்பி வைத்துள்ளது.

## 'டில்லி வெடிகுண்டு விபத்து நேருவுக்கெதிரான சதிவேலையல்ல'

புதுடில்லி, ஞாயிறு

புதுடில்லி வீதியொன்றில் சென்ற சனிக்கிழமை இரவு வெடிகுண்டு ஒன்று வெடித்தது பற்றி புதுடில்லிப் பொலிஸ் புலன்விசாரணை செய்து வருகிறது. பிரதமர் நேருவுக்குச் சதிசெய்யும் நோக்கத்துடன் குறிவைத்து இக்குண்டு வெடிக்கப்பட்டது என்ற சந்தேகத்தைப் பொலிஸ் ஏற்றுக்கொள்ளவில்லை. குண்டுவெடித்த சம்பவத்துக்கு ஐந்து நிமிடங்கள் முன்னதாகப் பிரதமர் நேரு தமது காரில் அவ்வீதிவழியே சென்றதாகத் தெரிகிறது. பிரதமர் நேரு பொருட்காட்சியொன்றைத் திறந்துவைத்துவிட்டு வீடு திரும்பினாராம். குறித்த பொருட்காட்சியில் திரு. நேரு சீக்கிய தலைவர் தாராசிங் அனுஷ்டித்து வரும் உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி கேட்டுக்கொண்டாராம். பஞ்சாபி மொழி ராஜ்யம் வழங்குமாறு கோரி சீக்கிய தலைவர் தாராசிங் உண்ணாவிரதம் அனுஷ்டித்து வருவது அனைவருக்கும் தெரிந்ததே.

வெடித்த குண்டினால் 6 பேர் காயமுற்றிருப்பதாகத் தெரிகிறது.

இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கீழ்வரும் செய்தியைப் பிரதம நேருவுக்கு அனுப்பியுள்ளார்:

புதுடில்லி நோக்கித் தாங்கள் சென்றுகொண்டிருக்கையில் வெடிகுண்டு வெடித்த சம்பவத்தை மிகுந்த கவலையுடன் கேள்வியுற்றேன். தங்களுக்கு எதுவித தீங்கும் நேராததையிட்டு எனது மகிழ்ச்சியையும் ஆறுதலையும் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

## சீனவுக்கு நேரு வாழ்த்து

புதுடில்லி, அக். 1

சீனக் குடியரசின் பன்னிரண்டாவது ஆண்டுவிழாவையொட்டி பாரதப் பிரதமர் திரு. நேரு சீனப் பிரதமருக்கு வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

### மணி வாக்கு

அச்சம் வேண்டாம். இதுவே மந்திரம். காந்தி பிறந்த நாளில் ஜெபம் செய்ய வேண்டிய மந்திரம் இதுவே.

—ராஜாஜி


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு புரட்டாசி மீ 16 உ (2 10 61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegarms EELA NADU Jaffna
Phone: 389.


## மகாத்மா ஜயந்தி

பாரத நாடுமட்டுமன்றி இன்று உலகில் பல நாடுகளும் மகாத்மா காந்தியின் ஜயந்தி விழாவை நன்றியுடன் கொண்டாடக் காரணமுண்டு. சிறப்பாக இலங்கை முதலிய ஆசிய, ஆபிரிக்க நாடுகள் அரசியல் விடுதலை பெற்றுள்ளதற்கும் மகாத்மாவின் முயற்சியே காரணமாகும். இந்தியா விடுதலை பெற்றதாலேயே இலங்கையிலுள்ள நாமும் அரசியல் சுதந்திரம் பெற முடிந்தது. ஆகவே மகாத்மாவுக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

உலக சரித்திரத்திலே பல நாடுகள் அடிமைப்பட்டும் விடுதலை பெற்றுமுள்ளனதான். அரசியல் சுதந்திரம் பெற்ற பின்பும் பிரிட்டனுக்கும் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளுக்கும் மனக் கசப்பு சற்றுமின்றி, நல்லுறவும் நல்லெண்ணமும் இருப்பது என்றும் காணாத அதிசயமாகும். இதற்குக் காரணம் சத்தியம், அகிம்சை என்ற இரு புனித ஆயுதங்களைக் கொண்டு மகாத்மாபோராடி வெற்றிபெற்றுஉலகிலில்லாத புதுமையைச் செய்து பிறருக்கும் வழி காட்டினர்.

கருத்து வேற்றுமைகள் என்ன இருப்பினும், எதிராளிகள்மீது துவேஷமோ, வெறுப்போ அவர் காட்டியதில்லை. அளவு கடந்த பொறுமையும், அன்பும் காட்டினர். பகைவனுக்கும் அருள் செய்தார். சமூக ஒற்றுமைக்காக கடைசியில் தன் உயிரையும் தியாகம் செய்தார். மகாத்மாவின் பெருமைக்கு அவர் காட்டிய இவ்வரிய குணதிசயங்களே காரணம். அரசியலில் முட்டுக்கட்டைகள் ஏற்படுவது இயற்கை. இலங்கையிலும் இன்று பெரிய முட்டுக்கட்டை ஏற்பட்டுளளது. மகாத்மா காட்டிய வழியை இலங்கை அரசாங்கமும் பல தலைவர்களும் பின்பற்றுவதாயின், இந்த முட்டுக்கட்டைகள் சுமுகமாகத் தீர்ந்து நாடு ஒற்றுமையாக சுபிட்சப் பாதையில் செல்ல முடியும்.

அரசியல் மட்டுமன்றி, சமூக பொருளாதார விடுதலைக்கும் போராடி பல ஆக்க முறையில் நிர்மாண திட்டங்கள் அமைத்து நடத்தினர் மகாத்மா. கதர், கிராமக் கைத்தொழில்கள், மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, சமூக ஒற்றுமை முதலிய திட்டங்களை வகுத்து அதற்கான பல ஸ்தாபனங்கள் அமைத்து, புதிய பாரதத்துக்கு வித்திட்டார். அவர் காட்டிய இந்த ஆக்க முறைத் திட்டம் இலங்கைக்கு இச்சமயம் பெரிதும் பயன்பட வேண்டும். ஆக்க வழியில் திட்டம் அமைத்து நடத்தினுல், அரசியல் முட்டுக்கட்டையும் தீர நல்ல சூழ்நிலை ஏற்படலாகும்.

"தன்னுயிர் போலே தனக்கழிவெண்ணும், பிறனுயிர் தன்னையும் கனித்தல், மன்னுயிரெல்லாம் கடவுளின் வடிவம் கடவுளின் மக்களென்று உணர்தல்" எனும் மெஞ்ஞானத் துணிவினைப் பெற்றதாலேயே, மகாத்மாவுக்கு அவ்வளவு அன்பும் பொறுமையும், தெளிவும் ஏற்பட முடிந்தது. உறுதியான தெய்வ நம்பிக்கையும் பக்தியும்

# யாழ்ப்பாண கல்லூரிகளில் மகாத்மா உபதேசித்த பொன்மொழிகள்

**மகாத்மா காந்தி 34 ஆண்டுகளுக்கு முன்பாக நம் இலங்கைக்கு கடைசியாக விஜயம் செய்தார். யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசைச் சேர்ந்த திரு. ஹன்டி பேரின்பநாயகம், சென்னையிலே காந்தி அடிகளை சந்தித்து ஈழத்துக்கு அழைத்ததன்மீதே, அடிகள் இலங்கை வந்து பல கூட்டங்களில் பேசினுர்கள். மகாத்மா காந்தியின் ஜயந்தி விழாவாகிய இன்றைய புனித நாளில், இலங்கையிலே பல கூட்டங்களிலும் அவர் கூறிய பொன்மொழிகளில் சிலவற்றை நாம் இங்கு ஞாபகப்படுத்திக் கொள்வோம்.**

*யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் (26-11-27).*

"புராதன கலாசாரத்துக்குப் புத்துயிரளிப்பது உங்கள் முதல் நோக்கமென்று செரிகிறது. புராதன கலாசாரமென்ருல் என்ன? இந்துக்கள், கிறிஸ்தவர், முஸ்லீம்கள், பௌத்தர்கள் முதலிய எல்லா சமயங்களையும் சேர்ந்த வாலிபர்களின் கலாசாரமாகவே அது இருக்க முடியும். இந்து மாணவர்களுக்குள்ளாக மட்டும் அதை நீங்கள் கட்டுப்படுத்த விரும்பவில்லை என்றே கருதுகின்றேன்.

இந்து கலாசாரம் என்பதில் நான் பௌத்த கலாச்சாரத்தையும் அலசியமாகச் சேர்க்கின்றேன். ஏனெனில், புத்தரே ஒரு இந்தியர் அவர் இந்தியர் மட்டுமல்ல, ஹிந்துக்களில் ஒரு ஹிந்து ஆவார். அவர் இந்து மதத்தை விட்டு புதிய மதத்துக்கு மாறியதாக, அவர் வாழ்க்கையிலே நான் எதுவும் காணவில்லை. இயேசுவும் ஓர் ஆசியாக்காரரே. முகம்மதுவும் அப்படியே ஆகவே நாம் ஆசியா அல்லது புராதன ஆசிய கலாசாரமென்ருல் என்ன என்பதை ஆராய வேண்டியவர்களாக இருக்கிரேம்.

புராதனமான கலாசாரத்தில் உன்னதமானதும், நிரந்தரமானதுமான எல்லாவற்றையும் பின்பற்ற வேண்டுமென்பதே உங்கள் விருப்பமாக இருக்குமானல், அவற்றில் எதுவும் மேற் குறித்த எந்த மகத்தான மதங்களுக்கும் மாறுனதாக இருக்க முடியாது. இச் சமயங்களுக்கெல்லாம், **சத்தியம், அஹிம்சை** இவ்விரண்டும் பொதுவானதும் உன்னதுமானதுமான கோட்பாடென்ற என் கருத்தை நீங்களும் ஒப்புவதுடன், நீங்களும் உண்மை, அகிம்சை எனும் இரு தர்மங்களையும் கடைப் பிடிக்க விரும்புவீகளென்றே நான் கொள்ளுகின்றேன்.

புராதன கலாசாரமென்பதின் பெயரால், தீண்டாமை, தேவதாசி முறை, ஆலயங்களில் உயிர்ப்பலி, மதுபானம் முதலிய கூடாத பழக்கங்களை புதுப்பிக்க நாம் யாரும் விரும்பமாட்டோம் அவற்றை அகற்றி ஒதுக்கி விடுவதில் நமக்குத் தயக்கமே இருக்க முடியாது.

இனி ஆக்க முறைகளில் நாம் என்ன செய்ய வேண்டுமென்பதை கவனிப்போம். அகிம்சையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கூறினேம். அகிம்சை என்பது என்ன? இந்த உலகிலே மிக மிகத் தாழ்ந்த ஒரு மனிதனுக்குக் கிடைக்க முடியாததை நாமும் பெற விரும்பக்கூடாதென்பதே அகிம்சை என்று செட்டிநாட்டிலே, தீவிர சீர்திருத்த ஊழியர் சிலர் சேர்ந்து தீர்மானித்தனர். இக் கருத்து சரியானல், இதை நீங்களும் ஒப்புக்கொண்டால் நாம் நமது புராதன எளிய வாழ்க்கை விடமுடியாது. மேற்கிலிருந்து வேகமாக அடித்து நம்மை மயக்கும் நவீன படாடோபங்களை நான் ஏன் உறுதியாக எதிர்க்கின்றேன் என்பதை நீங்கள் இப்போது உணரலாம்.

ஆகவே உங்கள் புராதன கலாசாரத்தை நீங்கள் உண்மையில் பின்பற்றுவதாயின், நவீன படாடோப வாழ்க்கையை அடியோடு மறுத்து, எளிய சிக்கன தூய வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

* * *

*யாழ்ப்பாணம், அர்ச். ஜான் கல்லூரி (29-11-27)*

உங்கள் பள்ளிக்கூடத்தில் எவ்வித சாதி வேற்றுமையும் இல்லாததும் யாரையும் தீண்டாதவராகக் கருதுவதில்லை என்பதும் மிகப் பெரிய காரியம். கதர் நிதிக்காக குழந்தைகளும், பெண்களுக் கொடுத்துள்ள இந்தப் பணம், தீண்டாதார் என்பவர்களைவிட மிகவும் துரதிருஷ்ட வறிய நிலையிலுள்ளவர்கள். பசியாற உண்ண வழியில்லை அவர்களை நினைத்து நீங்கள் செய்துள்ள இவ்வித உதவிக்காக தெய்வம் உங்களை ஆசீர்வதிக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்வதைவிட வேறு கைமாறு செய்யும் சக்தி எனக்குல்லை. இதயத்தில் கருணை பூக்காவிடில் வெறும் மனப் பயிற்சியால் மட்டும்பயனில்லை.

* * *

*யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் (29-11-27)*

என் இதயக் கோவிலிலுள்ள பெரிய மகான்களில் இயேசுவும் வீற்றிருக்கின்ருர். எனது வாழ்க்கையை உருவாக்குவதில் அவரது போதனைகளுக்குப் பெரும் பங்குண்டு. கிறிஸ்தவர்கள் விஷயம் இருக்கட்டும். இக் கல்லூரியில் படிக்கும் 75 சத இந்து மாணவர்கள் கிறிஸ்து பெருமானின் உபதேசங்களை பக்தியுடன் படிக்காவிடில் அவர்களது படிப்பு பூரணமாகாது. நம்மில் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாயினும் சரி, மற்ற சமய போதனைகளையும் நாம் பக்தியுடன் படிப்பதாயின், நமது இதயம் குறுகாமல் விரிவடைகிறதென்பதை நான் உணர்ந்துள்ளேன். உலகிலுள்ள எந்தப் பெரிய சமயத்தையும் பொய்யானதென்று நான் கருதவில்லை. மனித சமுகத்தை மேம்படுத்த எல்லாச் சமயங்களும் உதவியுள்ளன. இப்போதும் உதவுகின்றன. எல்லா சமயங்களைப்பற்றியும் மாணவர் அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும்.

நம் இதயத்தை பரிசுத்தப் படுத்தும், சரியான தோட்டிவேலையைச் செய்தால், நம் இதயக் கோவிலிலே எல்லாச் சமய மகான்களும், அறையின்றியே வீற்றிருப்பர். இதுவே உண்மையான கல்வியின் அடிப்படை என்றும், இதயப் பண்பே, மனப் பண்பை விட முக்கியமென்றும் கருதுகிறேன். நீங்கள் பரிசுத்தமடைய ஆண்டவன் அருள் புரிவாராக!

* * *

*உடுவில் பெண்கள் கல்லூரியில் (29-11-27)*

நம்மிடையே, கெட்டகாரியம் செய்யும் மாணவியாருமிருந்தால், அவர்கள் படிக்கும் படிப்பு பயனற்றது. இங்கு அப்படிப்பட்ட யாரும் இல்லை என்றே நம்புகிறேன்.

உங்களை வெறும் பொம்மைகளாக்க உங்கள் பெற்ருேர்கள் படிக்கவைக்கவில்லை. நீங்களெல்லாம் இதற்குமாருக "ஸிஸ்டர்ஸ் ஆப் மர்ஸி" (கருணையுள்ள சகோதரிகள்) களாக நீங்கள் ஆகவேண்டும். ஒரு குறிப்பிட்ட உடை தரித்தவர்தான் 'ஸிஸ்டர்ஸ் ஆப் மர்ஸி' என்று தவருகக் கொண்டு விடாதீர்கள். தன்னைப் பற்றி குறைவாகவும், தன்னை விட எளிய, துரதிருஷ்ட நிலையிலுள்ளவர்களைப் பற்றி அதிகம் நினைப்பவர்களும் உடனடியாக 'கருணையுள்ள சகோதரிகளாக ஆகிவிடுகிறீர்கள்.

சிறிய தொகை கொடுப்பது சுலபம். ஆனல் ஒரு சிறிய பணியைத் தானே செய்வது கடினம். நீங்கள் யாருக்காகப் பணம் கொடுத்தீர்களோ அவர்களுக்காக நீங்கள் உண்மையில் இரக்கப்படுவதாயின், நீங்கள் ஒரு படி முன்னேறி அவர்கள் தயாரித்த கதர்த் துணியை பிரியமாக உடுத்த வேண்டும்.

உங்களிடையே உயர்வு தாழ்வு, தீண்டத்தக்கவர், தீண்டத்தகாதவர் என்றவேற்றுமை இங்கு இல்லாதது மிகவும் நல்லது. உங்கள் இதயமும் அதே மாதிரி இருப்பின், மற்ற பெண்களைவிட நீங்கள் உயர்ந்தவர்களென்று உங்களை நீங்கள் கருதாதிருப்பின், அது உண்மையில் மிக மிக நல்லது. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

* * *

*யாழ்ப்பாணக் கல்லூரியில் (29-11-27)*

நீங்கள் அளித்த பண முடிப்பை மிகப் பெரிதாகக் கருதுகிறேன். இப் பணத்தால் தயாராகும் கதர் உடையையும் நீங்கள் தரித்து, அந்த எளிய மக்களுடன் நீங்கள் பலத்த உறவு கொள்ளவேண்டும். தினசரி இந்த உடையை தரிப்பதால், நீங்கள், இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான மக்கள்பால் கருணை காட்டுகின்றீர்களென்பதை உங்களுக்கு எப்போதும் நினைவூட்டிக்கொண்டிருக்கும்.

சத்தியம், அகிம்சை இவற்றை அடிப்படையாகக் கொண்டதாக கல்வி இருக்க வேண்டுமென்றும், வெறும் புத்தகப் படிப்பாலும் மனப் பயிற்சியாலும் மட்டும் பயனில்லை என்றும் உங்கள் ஆசிரியர்கள் உங்களுக்கு அடிக்கடி போதிப்பாரென்பதில் எனக்கு சந்தேகமில்லை. சத்தியமே உங்களை தைரியவான்களாகவும், பயமற்றவர்களாகவும் ஆக்கும். நீங்கள் எங்கு சென்ருலும்

(5ம் பக்கம் பார்க்க)

தான்மகாத்மாவின்வெற்றியின் ரகசியங்கள். எல்லா உயிர்களிலும் தெய்வத்தைக் கண்டதால் அவருக்கு அரசியல் எதிராளி மீதும் அன்பு பெருக முடிந்தது. சர்வசமய கூட்டுப்பிரார்த்தனை மூலம் சமூக ஒற்றுமையையும் பக்தியையும் வளர்த்து, தெய்வத்தின் அருளால், இம்மையிலேயே எதுவும் பெற முடியுமென்பதை உலகுக்கு வாழ்ந்து காட்டினர் அமரரான மகாத்மா. அவரது ஜயந்தியாகிய இன்றைய நாள் அவர் காட்டிய மேலான வழியை நமக்கு ஞாபகப்படுத்தி, நாமும், நாடும், உலகமும் உய்ய, அவ்வழியைப் பின்பற்றி நடக்க நமக்கு எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல அந்தத் தெய்வமே துணை செய்யவேண்டும்.

## ஐயாறன் எழுதுவது

காரைநகர் குருகுலத்தில் முந்தாநாள் ஒரு கூட்டம் நடந்தது. கூட்டத் தலைவரும் குருகுல ஸ்தாபகருமான நவரத்னம் மாஸ்டர் தமக்கு மாதத்தில் 3 ரூபாய்தான் செலவென்றும் தமக்குக் கிடைக்கும் சம்பளத்தில் பாக்கியை என்ன செய்வதென்று தெரியவில்லை என்றும் கூறியதைக் கேட்க, மிக அதிசயமாக இருந்தது.

நம்மில் பலருக்கும் எவ்வளவு சம்பளம் கிடைத்தாலும் போதுவதில்லை. என் நண்பரொருவர் 30 ரூபா சம்பளம் வாங்குகையில் போதவில்லை என்று கூறிவந்தவர், இப்போது அதைப்போல் 20 மடங்குக்கு மேல் வாங்குகையிலும் அதே பல்லவிதான் பாடுகிருர்.

ஆனல் ஒரு வித்தியாசம் முப்பது ரூபாய் வாங்குகையில் அவர் ஒரு தனி ஆள். பிரம்மச்சாரி. இப்போது மனைவி நாலைந்து குழந்தைகள். விலைவாசிகள் பல மடங்கு உயர்ந்து பணத்தின் மதிப்பும் பெரிதும் குறைந்துள்ளது. ஆகவே எவ்வளவு சம்பளம் கிடைத்தாலும் போதவில்லை என்கிருர்.

∴ ∴ ∴

தனி ஆளாக இருந்தாலும் சாப்பாடு, உடை, பஸ், க்ஷவரம், சலவை முதலிய செலவுகளெல்லாம் சேர்த்தால், நூறு ரூபாய்க்கு மேலும் வரும். எப்படி அந்த மாஸ்டர் 3ரூபாயில் மாதத்தை ஓட்டுகிருர். என்று வியப்பாக இருந்தது.

"சாப்பாடு அம்மா போட்டு விடுகிருர். அதனல் அந்தச் செலவில்லை" என்ருர். கதர் தான் கட்டுவது. வேட்டி சட்டைகளை சலவைக்குப் போடாமல் தானே துவைத்துக் கட்டுடுகிருர் ஒரு க்ஷவர பிளேட்டை பத்து நாட்களுக்கு பாவிக்கிருர். பஸ் சரிவர ஓடவில்லை என்ருல் நாம் டாக்ஸியில் போவோம். அவரோ,இரண்டுமை[illegible] தூரமுள்ள தமது கல்லூரிக்[illegible] நடந்தே போய்வருகிருர்! [illegible] சதம் தமக்காக வீண் செல[illegible] செய்ய மாட்டார். சினிமா நா[illegible]கம் கிடையாது. மூன்று ரூபா[illegible]யும் எப்படி செலவாகிறெ[illegible]ன்று தெரியவில்லை.

சம்பளம் போதவில்[illegible] என்று கூறி சங்கடப்படுகி[illegible]வர்கள், கிடைக்கும் வருவாயில் எப்படி சிக்கனமாக வாழ்வது என்பதை அவரிடமிருந்து கற்றுக்கொள்ளலாம்!

∴ ∴ ∴

அவர் சமீபத்தில் லண்டன் பிரான்ஸ், ஜெர்மனி, ரஷ்யா முதலிய நாடுகளுக்குச் சென்று உயர்தர கல்வி கற்று திரும்பினர். ஒரு வருடத்துக்கு மேல் அவர் வெளிநாடுகளிலிருந்தாலும், கப்பல் செலவு போக, மிகமிகக் குறைந்த பணமே செலவழித்ததாகக் கூறினர். இது ஒரு "ரிகார்டாகவும் இருக்கலாம்!

மிச்சப்படும் பணத்தைக் கொண்டு, அவர் சில மாணவர்களுக்கு இலவசமாக ஸ்காலர்ஷிப் கொடுக்கத் தயாரென்று கூட்டத்தில் அறிவித்தார். சபாஷ்! தமக்கென வாழாது பிறருக்காக வாழும் பெருந்தகைகள் மிக மிக அரிதல்லவா!

மூன்று வருடங்களுக்கு முன்பாக நாகபுரிக்குப் பக்கத்திலுள்ள வார்தா சேவா கிராம ஆசிரமத்துக்குச் சென்றிருந்தேன் அங்கு பல தொழிற்சாலை, ரஸ்தா, ஆஸ்பத்திரி இவற்றில் மின்சார விளக்குகள் எரிந்தன. ஆனல் மகாத்மா வசித்த 'பர்ணசாலை'யிலும், விசிட்டர்கள் அறைகளிலும் மின்சார விளக்கில்லை.

ஏன் என்று விசாரித்ததில், ஏழை மக்களின் வீடுகளில் மின்சார விளக்குகள் வராதவரை நாம் அதை பாவிப்பது ஹிம்சை என்று கருதியே

(5-ம் பக்கம் பார்க்க)

# "கோடரியிலும் சால்வையிலும் மனிதரத்தம் இருந்தது"

## ஊரெழு கொலைவழக்கில் அரசாங்க உதவி பரிசோதகர் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஊரெழு கொலை வழக்கு சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாணம் நீதவான் திரு. அரசு வால்டன் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணையைப் பார்ப்பதற்காக பெருந்திரளாக மக்கள் கூடியிருந்தனர்.

ஊரெழுவைச் சேர்ந்த மாரிமுத்து மார்க்கண்டு என்பவரைக் 'கொலை செய்யச்சதி செய்ததாகவும் மார்க்கண்டுவைக் கொலைசெய்ததாகவும், கொலைக் குரியசாட்சியங்களை மறைக்கக் காரணமாக இருந்ததாகவும் குற்றம்சாட்டி கே. செல்லையா என்ற ஓய்வுபெற்ற மராமத்து இலாகா ஓவர்சியரின் பணியாள் மாடசாமி, கார் சாரதி முத்து முத்துச்சாமி, திரு. செல்லையாவின் மகள் சரஸ்வதி ஆகியோர் மீது சுன்னாகம் பொலிசைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் கே. செபமாலை இவ்வழக்கைத் தொடர்ந்துள்ளார்.

காங்கேசன்துறை உதவி பொலிஸ் சுப்ரின்டென்ட் திரு. மரியநாயகத்துடன் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. எஸ். சிவராசா வழக்கை நடத்தினர்.

திருவாளர்கள் வி. செல்லத்துரை, ஆர். ஜே. செல்வரத்தினம் ஆகியோரின் அனுசரணையுடன் திரு. எஸ். எச். எம். சாகிது, திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியு. ஸி. முதலாம், மூன்றும் எதிரிகளின் சார்பில் ஆஜரானர். திரு. ஆர். விசுவநாதனின் அனுசரணையுடன் திரு. டி. கணேசலிங்கம் இரண்டாம் எதிரியின் சார்பில் ஆஜரானர்.

உதவிஅரசாங்க பரிசோதகர் திரு. டி. கணேசர் தியாகராஜா சாட்சியமளிக்கையில் கோர்ட்டினல் தமக்கு பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்ட பொருட்களைத் தாம் பரிசோதனை செய்ததாகவும் ஒரு கோடரி, ஒரு சால்வை ஆகியவைகளில் மனித இரத்தம் படிந்திருந்ததாகவும் கூறினர். கோர்ட்டின் வேண்டுதலுக்கிணங்க தாம் யாழ்ப்பாணம் வந்து நீதிமன்றக்கட்டிடத்தில் வைக்கப்பட்டிருந்த மோட்டார் காரைப்பரிசோதனை செய்ததாகவும் காரின் சாமான்வைக்கும் இடத்தில் சிறு இரத்தக்கறை படிந்திருந்ததாகவும் அவர் கூறினர். கோர்ட்டினல் தமக்கு அனுப்பப்பட்ட ஒரு சாக்கில் எதிரியின் வீட்டில் காணப்பட்ட மணல் போன்று இருந்ததாகவும் திரு. தியாகராஜா தெரிவித்தார்.

இதன்பின் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் திரு. தியாகராஜாவை குறுக்கு விசாரணை செய்தார்.

திரு. பொன்னம்பலத்தின் கேள்வியொன்றுக்கு அவர் பதிலளிக்கையில் இரத்தக்கறை படிந்த பகுதிகளைப்பற்றித்தாம் குறிப்பெடுத்துக் கொள்ளவில்லையென்றார். காரின் சாமான் வைக்கும் பகுதியில் காணப்பட்ட இரத்தக்கறை அங்கு எப்படிவந்ததென்று தம்மால் சொல்லமுடியவில்லையென்றார். இறந்தவரின் உடலிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரி இரத்தம். அழுகிய நிலையிலிருந்த சடலத்திலிருந்து எடுக்கப்பட்டதாதலால் தமக்கு பரிசோதனைக்கு அனுப்பப்பட்ட பொருள்களில் காணப்பட்ட இரத்தமும், மாதிரி இரத்தமும் ஒரே பிரிவைச் சேர்ந்தவைகள் தானென்று சொல்லமுடியவில்லையென்று மற்றொரு கேள்விக்குப்பதிலளிக்கையில் திரு. தியாகராஜா கூறினர்.

பரிசோதனைக்காக அனுப்பப்பட்ட காலஞ்சென்றவரின் தலைமயிரில் இரத்தக்கறை இருக்கவில்லையென்றும் சாட்சி தெரிவித்தார்.

இரத்தக்கறைக்காக கோர்ட்டில் சமர்ப்பிக்கப் பட்டிருந்த கதவை நீதவான், சாட்சி திரு. தியாகராஜா, வழக்கறிஞர் ஆகியோரும் பார்வையிட்டனர். கதவில் வெண்கட்டியால் அடையாளமிடப்பட்டது தன்னுடையதல்லவென்று திரு. தியாகராஜா சொன்னர்.

திரு. பொன்னம்பலம் சாட்சி தியாகராஜாவின் குறிப்புப்புத்தகத்தை வாங்கிப்பார்த்துவிட்டு, "மூன்று எதிரிகள் மீது கொலைக்குற்றம் சாட்டப்பட்டுள்ளது. நீர் உமது குறிப்புக்களில் கவனமாக இருக்கவேண்டும்" என்று கூறினர்.

இதன்பின் பதில் சட்டவைத்திய அதிகாரி டாக்டர் ஏ அருமைநாயகம் மீண்டும் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டார். முதல் எதிரியை இவ்வருடம் மேமாதம் 27-ந் திகதி தாம் சோதனை செய்ததாகவும் இரண்டு முழங்கைகளுக்கும் சமீபத்தில் இரண்டு சிராய்ப்புக் காயங்களிருந்ததாகத் தெரிவித்தார்.

திரு ஜி. ஜி. பொன்னம்பலம் குறுக்குவிசாரணை செய்தபின் மேல்விசாரணை இம்மாதம் 16-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மின் விளக்குகளை உபயோகிக்கவில்லை என்று தெரிந்தது. பொதுப்பணத்தை செலவிடுவதில் மிக மிக கண்டிப்பு. ரயிலில் மூன்ரும் வகுப்பில் தான் செல்லுவார். தாமே நூற்ற நூலால் ஆன உடை தான் தரிப்பார். ஒருவர் மூன்றுக்கு மேலான சட்டை வைத்திருந்தால், அவர் ஒரு திருடன் என்பார் அடிகள்!

உலகிலேயுள்ள மக்களுக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவே ஆண்டவன் படைப்பதாயும், தேவைக்குக் கூடின துணிகளைப் பாவிப்பது, மற்றவர்களுக்கு அதே கிடைக்க முடியாதபடி செய்வதாகும் என்பது அடிகளின் கொள்கை!

ஒருவர் உணவை ஒருவர் பறிக்கும் வழக்கம் இல்லாதிருப்பின் உலகமெல்லாம் எவ்வளவு சுபீட்சமாக வாழ முடியும்!

ஃ ஃ ஃ

வாலு போச்சு கத்தி வந்தது டும் டும் டும் என்று ஒரு குரங்குக் கதையுண்டு. அது போல காங்கோ ஆச்சு, ஸிரியா வந்தது டும் டும் டும்! அடுத்தபடி எந்த நாடோ எல்லாம் வல்லரசுகளின் சித்தமல்லவா?

# டாக்டர்-வைத்தியர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டாந்தப் பொதுக்கூட்டத்தில் பேசும் போது கூறினர்.

மேல்நாட்டு வைத்தியங்களைச் செய்து வரும் டாக்டர்கள் ஆயுள்வேத முறைகளையும் தமது சிகிச்சை முறைகளோடு சேர்த்துக்கொண்டார்களானல் நமது நாடு மருந்து வகைகளை இறக்குமதி செய்வதில் செலவாகும் பணத்தொகையைக் குறைத்துக்கொள்ளலாம் என திரு. ஒவிட்டிகலை குணசேகரா கூறினர்.

மேல்நாட்டு வைத்தியம் செய்யும் டாக்டர்களும் ஆயுள்வேத வைத்தியர்களும் ஒன்று சேர்ந்து உழைப்பதைத் தாம் விரும்புவதாக அவர் கூறினர் ஆயுள்வேத பிரச்சினைகள் பற்றி அவர் குறிப்பிட்டதாவது:

சென்ற 50 வருடங்களாக ஆயுள்வேத வைத்தியம் விருத்தியுறுவதற்கென ஆயுள்வேத வைத்தியர்கள் பாடுபட்டுள்ளார்கள். அரசாங்கம் சட்டத்தால் உரிமை வழங்கியுள்ளது. இவ்வருட இறுதியில் இச்சட்டங்கள் அமுல் செய்யப்படும். 12,000 ஆயுள்வேத வைத்தியர்களின் நலனகளை காங்கிரஸ் மனதில் கொண்டுள்ளது.

தேசிய வைத்திய முறைகளைக் கொண்ட இந்தியா, பர்மா, இலங்கை, சீனு ஆகிய கிழக்குநாடுகள் ஆயுள்வேத வைத்தியத்தை இவ்வளவு காலமும் திட்டவட்டமாக முறைப்படுத்நாது இருந்துவிட்டன. இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இலங்கையராகிய நாம் பாடுபட்டு வருகிறேம். ஆயுள்வேத வைத்தியர்களின் உதவியுடனும் அரசாங்கத்தின் ஆதரவுடனும் இந்த முயற்சியில் நாம் வெற்றி பெறுவோமாயின் வைத்திய உலகத்துக்கு நாம் மகத்தான ஒரு தொண்டு செய்தவர்களாவோம்."

# மூன்று மொழிகளிலும் 'போஸ்டல் ஆர்டர்'கள்

கொழும்பு, திங்கள்

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் புதிய 'போஸ்டல் ஆர்டர்' களின் விநியோகத்தை போக்குவரத்து மராமத்து மந்திரி திரு பி. ஜி. பி. கலுகல்லை கொழும்புப் பொதுத்தபால் கந்தோரில் இன்று ஆரம்பித்துவைப்பார். 15 ரூபாய், 20 ரூபாய் பெறுமதியான புதிய போஸ்டல் ஆர்டர்களும் இன்று விற்பனையாகும்.

# யாழ்ப்பாண கல்லூரிகளில்...

(4ம் பக்கத்தொடர்ச்சி)

வெற்றி பெறத்துணை செய்யக்கூடியதும் அதுவே. அன்பு காட்டினல், அதிக அன்பு கிடைக்குமாதலால், அன்பே வாழ்க்கையை இனிமையாக்கும்.

உங்களுக்குள்ளாக இந்தக் குணங்களைப் பெருக்க, ஆண்டவன் தினம் தினம் துணை செய்வாராக!

* * *

இராமநாதன் கல்லூரியில் (29-11-27)

சேர் இராமநாதனின் தர்ம சிந்தைக்கும், தீர்க்கதரிசனத்துக்கும் அடையாளமாகபொலியும் இந்த ஸ்தாபனத்துக்கு நான் வராமலிருந்திருப்பின், நான் என்றென்றும் பெரிதும் வருந்தவேண்டியவனாக இருப்பேன்.

இந்த நாளை வருடாவருடம் நீங்கள் கொண்டாடி, கதர் வேலைக்குப் பண[illegible] செய்யப்போவதாக உபச[illegible] பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளது என் இதயத்தைத் தொட்டுவிட்டது. நீங்கள் இந்த உறுதிமொழியை உண்மையில் பக்தியுடன் நிறைவேற்றுவீர்கள் என்பதை நானறிவேன்.

நீங்கள் தினசரி மாலையில் பிரார்த்தனையுடன் வேலை ஆரம்பிக்கிறீர்கள். இதை ஆக்க வேலையாக மாற்ருவிடில், இது அழகான ஒரு சம்பிரதாய சடங்காகிவிடக்கூடும். ஆகவே இந்த வழிபாட்டைப் பின்பற்றி சர்க்கா அல்லது கைராட்டையில் அரை மணி நூல் நூற்றல் செய்து அந்த கோடிக்கணக்கான எளிய மக்களை நினைவு கூருங்கள். தயங்காமல் கதர் உடுத்துங்கள்.

உங்கள் சஞ்சிகையில், இவர் இவரை விவாகம் செய்தார் என்பது போன்ற ஐந்தாறு விளம்பரங்களைப் பார்த்தேன். 22 அல்லது 25 வயது பெண் விவாகம் செய்வதில் தவறில்லை. ஆனல் யாராவது ஒரு மாணவி தன் வாழ்க்கையை சேவைக்காக அர்ப்பணித்தாள் என்ற விளம்பரத்தை நான் இதில்காணவில்லை. நீங்கள் எல்லாம் படிப்பு முடிந்ததும், வீட்டில் வெறும் பொம்மைகளாகி மறைந்துவிடுவதாயின், இவ்வளவு சிரமப் பட்டு, கல்வி புகட்டுவதில் அதிக பயன் இல்லை.

பெரும்பாலான பெண்கள், படிப்பு முடிந்ததும், பொது வாழ்விலிருந்து மறைந்துவிடுகிருர்கள். இக் கல்லூரியைச் சேர்ந்த நீங்கள் அப்படியாகி விடக்கூடாது.

ஒவ்வொரு பெண்ணும், ஒவ்வொரு இந்தியப் பெண்ணும், விவாகம் செய்துகொள்வதற்காகப் பிறக்கவில்லை. ஒருவருக்கு பணி செய்வதற்கு பதில், பொதுப் பணிக்காக தங்களை அர்ப்பணித்த பெண்கள் பலருண்டு. பார்வதி, சீதை இவர்கள் போன்ற மகத்தானவர்களை இந்துப் பெண்கள், தரவேண்டிய காலம் வந்துவிட்டது.

நீங்கள் சைவரென்று கூறுகிறீர்கள். உங்களுக்குப் பார்வதியைத் தெரியும். புருஷனைப் பெற, பார்வதி பணம் செலவழிக்கவில்லை. அல்லது தன்னை விற்கவும் சம்மதிக்வில்லை. பள்ளிக்கூடங்களில் பட்டங்களும், பெறவில்லை. ஆனல் அவர் யாரும் கேட்டிராத "தபஸ்" செய்து கிடைத்தற்கரிய கணவரைப் பெற்ருர்.

இங்கு சீதனம் என்ற வெறுக்கத்தக்க ஒரு வழக்கம் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். இத்தீய வழக்கத்தை நீங்கள் எதிர்க்க வேண்டும். இதனல் கன்னிகளாகவோ, அல்லது பலவருடகாலம் விவாகமாகாமலோ இருக்க நேரிடலாம். விவாகம் செய்ய வேண்டுமென்ற விருப்பம் வரும்போது, பணம், படிப்பு, பதவி, அழகு என்பவைகளைவிட்டு, பார்வதியைப் போல, ஒப்பற்ற குணவானையே கணவனக வரியுங்கள். நாரதர் சிவ பெருமானைப் பற்றி எவ்வளவோ குறைவாகச் சொல்லியும் "அன்னவரே என் கணவர்" என்று பார்வதி அவரையே வரித்தார். பார்வதியைப் போல நீங்களும் தவமிருக்க வேண்டுகிறேன்.

நீங்கள் பொம்மைகளாக மறைந்துவிடாமல், பார்வதி, தமயந்தி, சீதா, சாவித்திரி இவர்கள் போல் சதிகளாக இருக்கவேண்டும். அப்போது தான் இந்த மேலான ஸ்தானத்துக்கு தகுதியாவீர்களென்பது என் தாழ்மையான கருத்து.

ஆண்டவன் இந்த ஆசையை உங்களுக்கு ஊட்டி, இதைப் பூர்த்தி செய்ய அருள் செய்வாராக!

# இ. போ. ச. இழந்த தொகை

கொழும்பு, ஞாயிறு

1958க்கும் 1960க்கும் இடையில் ரூபாய் 63,327-50 சதத்தை மோசடி காரணமாக இ. போ. ச. இழந்துள்ளது எனத் தெரிய வருகிறது. மராமத்து தேசியமய சேவைத் தற்காலிக மந்திரி திரு. எம். பி. டி. ஸற். சிறிவர்த்தன, கம்பஹா எம் பி. திரு. எஸ். டி பண்டாரநாயக்காவுக்கு எழுத்து மூலம் அனுப்பிய பதில் ஒன்றில் இவ்விபரம் கூறப்பட்டிருக்கிறது. 1958-ம் ஆண்டில் இ. போ. ச. மோசடி காரணமாக ரூபாய் 865-63 சதத்தை இழந்ததென்றும் 1959-ல் அதன் தொகை ரூபாய் 8,263-87சதமாக அதிகரித்ததென்றும், 1960-ல் அதன் தொகை ரூபாய் 54,198-01சதம் ஆயிற்று என்றும் தற்காலிக மந்திரி கூறியுள்ளார்.

வெரஹெராவில் உள்ள இ. போ. ச. டிப்போவில்தான் மோசடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இங்கு 1960-ல் ரூபாய் 10,397-73 பெறுமதியான பஸ் உதிரிப் பகுதிகள் காணமற் போயுள்ளன.

ஹோமகம 'டிப்போ'விலும் 1960-ல் ரூபாய் 1001-62 சதம் பெறுமதியான உதிரிப் பகுதிகள் காணமல் போயின.

அநுராதபுரம் டிப்போவில் பெறப்பட்ட வருமானத்தில் ரூபாய் 1000 காணமற்போனதாகவும் தற்காலிக மந்திரியின் அறிக்கையிற் கூறப்பட்டுள்ளது.

# ஆசிரியர் உரிமைகளை அரசினரிடம் வற்புறுத்தும்

## இன்று நடைபெறும் வருடாந்த பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

வலிகாமம் கிழக்கு ஆசிரியர்கள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அக்டோபர் 2-ம் திகதி மாலை 4-30-க்கு அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெறும். முன்னுள் வித்தியாதிபதியாகக் கடமையாற்றிய திரு. கே. எஸ். அருள்நந்தி கூட்டத்தின் முக்கிய விருந்தினராகக் கலந்து உரை நிகழ்த்துவார்.

இக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப் படவிருக்கின்றன.

அரசாங்க பள்ளிக்கூடங்களிலோ வித்தியாதிபதியின் நிர்வாகத்தின்கீழ் உள்ள பள்ளிக்கூடங்களிலோ ஓர் ஆண்டு தற்காலிக ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களின் தற்காலிக சேவையை அவர்களது இன்றைய சேவாகாலத்துடன் சேர்த்துக்கொள்ளுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுதல். அதேபோன்று தற்போது அரசாங்க பாடசாலைகளிலும் வித்தியாதிபதி நிர்வாகப் பாடசாலைகளிலும் கடமையாற்றிவரும் ஆசிரியர்கள், முன்னர் தோட்டப் பாடசாலை எதிலும் ஒருவரிடம் கடமையாற்றியிருந்தால் அந்தச் சேவையும் அவர்களது சேவாகாலத்துடன் சேர்க்கப்படல்வேண்டும்.

வித்தியாதிபதியின் நிர்வாகத்தின்கீழ் உள்ள பள்ளிக்கூடங்களின் முழுப் பொறுப்பையும் அரசாங்கம் எடுக்க நேர்ந்தால், இங்கு கடமையாற்றும் ஆசிரியர்கள், அரசாங்கம் எடுத்தபின் 10 வருட சேவையாற்று முன்னரே கால் பங்கு பென்ஷன் உரிமையுடன் இளைப்பாற வசதியளிக்கப் படல் வேண்டும்.

வித்தியாதிபதி நிர்வாகப் பள்ளிக்கூட ஆசிரியர்களின் அரசியல் உரிமைகளை அரசாங்கம் நீக்க நேரிட்டால் கிராமசபை, பட்டினசபை, நகரசபைகளில் அங்கத்தவர்களாகக்கடமையாற்றிவரும்ஆசிரியர்கள் தமது பதவிக்காலம் நீங்கும்வரையாவது கடமையாற்ற அரசாங்கம் அனுமதியளிக்க வேண்டும். மாறிவரும் சமுதாயத்துக்கேற்ப வர்த்தக தொழில் நுட்பப் பாடங்ளுகக்கான வசதிகளைப் பள்ளிக்கூடங்களில் அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்.


Dilka

டில்க்கா

ஆட்டிறைச்சி -ரூ. 1-90 ஒரு ரா.
கோழி இறைச்சி-ரூ.2-75 ,,
சோஜேஸஸ் (Sausages) 'ஹாம் பேக்கன்' முதலியனவும் பெற்றுக் கொள்ளலாம்.

டில்க்கா ஐஸ் கிறீம் கோ,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



தேவை

தட்டாதெரு, கலட்டி, கொக்குவில் மேற்கு, சுதுமலை ஆகிய இடங்களுக்கு சைக்கிளில் பத்திரிகை விநியோகம் செய்ய ஒருவர் தேவை. சைக்கிள் உள்ளவராயிருத்தல் வேண்டும். காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வீரகேசரி காரியாலயத்தில் நேரில் காணவும்.

—க. அருணசலம்

## மனைவியுடன் வாக்குவாதம் தற்கொலையில் முடிந்தது

யாழ்ப்பாணம், வியாழன்
பண்டத்தரிப்பைச் சேர்ந்த பெரியதம்பி சுந்தரம்(வயது40) என்பவர் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

இதுசம்பந்தமாக திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினார்.

வீட்டில் தனது மனைவியுடன் ஏற்பட்ட சிறு வாக்குவாதங் காரணமாக மனைவி சந்தைக்குச் சென்றிருந்த சமயம் பார்த்து "நான் செய்கிறேன் பார்" என்று சொல்லிக் கொண்டு வீட்டுக்குப் பின்புறம் சென்று காலை 9 மணியளவில் நச்சுத்திராவகம் அருந்தினார் என்றும் உடனே அவர் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டு அங்கு பிற்பகல் 1-30 மணியளவில் மரணமானார் எனவும் இறந்தவரின் மகள் தங்கரத்தினம் தமது சாட்சியத்தில் தெரிவித்தார்.

டாக்டர் எஸ். கணேசஐயா பிரேதபரிசோதனை நடத்தினார்.

திடீர்மரணவிசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## 22 பேர் விடுதலை

யாழ்ப்பாணம், சனி
யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து நேற்று 22 கைதிகள் விடுதலையாகி வெளிவந்தனர்.

காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் இரண்டாவது சிரார்த்த தினத்தையொட்டி கைதிகளுக்கு மன்னிப்பளிக்கும் திட்டத்தின்கீழ் இவர்கள் விடுதலை பெற்றனர்.

இவர்களில் ஒருவர் 20 வருடச் சிறைத் தண்டனை அனுபவித்து இன்னும் இரண்டு மாதங்களில் விடுதலைபெறுவதற்கிருந்தார்.

## கூ. மொ. வி. பண்டகசாலைகள் அவசியம்

அக்கரைப்பற்று, வியாழன்
"கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் போன்ற ஒரு கார்ப்பரேஷனால் வாழ்க்கைச் செலவைக் குறைத்துவிட முடியாது. ஒவ்வொரு டி. ஆர். ஓ. தொகுதியிலும் பல தொகையான கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளை நிறுவுவதாலேயே தனிப்பட்ட வியாபாரிகள் கொள்ளையடிக்கும் வழக்கத்தை முறியடிக்கலாம்."

தம்பிலுவில் வாலிபர் விளையாட்டுக் கிளப்பின் கூட்டமொன்றில் பேசுகையில் திரு. எஸ். தம்பிராஜா இவ்வாறு கூறினார். இங்கிலாந்திலும் ஸ்கொட்லாந்திலும் இருப்பது போன்று இங்குள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தைக் கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கமாக மாற்றுவதற்கு இது தக்க தருணம் என்று திரு. தம்பிராஜா கூறினார். கூட்டுறவு விநியோகம் தான் இன்றுள்ள பிரச்சினையைத் தீர்க்க முடியும். அரசாங்க கட்டுப்பாட்டுக்குள் அமைந்த கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்றும் அவர் கூறினார்.

## கடலில் மிதந்த சடலம்

பாணந்துறை, வெள்ளி
உதவிப் பொலிஸ் சுப்ரீண்டன்ட் திரு. பரெட் டி' சேரத்தின் பங்களாவுக்கு அருகிலுள்ள கடலில் இனம்தெரியாத ஒருவரின் சடலம் மிதக்கக் காணப்பட்டது. சுமார் 50 வயது மதிக்கக்கூடிய இம்மனிதர் வசம் ஒரு நற்சாட்சிப் பத்திரம் கண்டெடுக்கப்பட்டது. எஸ். எம். புஞ்சி அப்புஹாமி என்னும் பெயரில் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. பிங்கிரியா எம். பி. யிடமிருந்து அப் பத்திரம் பெறப்பட்டிருந்தது.

## 600 பேர் வேலை இழப்பா

கந்தளாய், வெள்ளி
கந்தளாய் கரும்பு பயிர் செய்கையில் ஈடுபட்டிருந்த சுமார் 600 ஊழியர் இம்மாத இறுதியில் வேலைநீக்கம் செய்யப்படுவர்.

அதிகமானோர் நிரந்தரமில்லாத அல்லது தற்காலிக ஊழியர்களே. வேலைநீக்கத்துக்கான உத்தரவுப் பத்திரம் இவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்த வார முற்பகுதியிலிருந்தே இவர்களுக்கு வேலை வழங்கப்படவில்லை.

காணி விவசாய நீர்ப்பாசன அமைச்சின் கீழ் இருந்த இப்பகுதி கைத்தொழில் உள்நாட்டுக் கலாசார மந்திரியின் கீழ் மாற்றப்பட்டுள்ளது.

---

ஊர்காவற்றுறை, வியாழன்
நாரந்தனைக் கிராமசபையின் எல்லைக்குட்பட்ட கரம்பொன் கயிற்றுத்தொழிற்சாலைக்குப் புதிய கட்டிடம் அமைக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

# கணவனை இழந்த இளம்பெண் கதறிக்கதறி அழுத சோகக்காட்சி

## யாழ்ப்பாணபுகையிரதநிலையத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் விபத்துக்குள்ளாகி பரிதாப மரணத்தைத் தேடிக்கொண்ட கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த பொன்னம்பலம் பாலசிங்கம் என்ற 24 வயது வாலிபருடைய மரணம் சம்பந்தமாகத் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசாரணை நடத்தினார்.

பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. டி. எஸ். கலால்டீன் சாட்சியம் அளிக்கையில் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் வெள்ளிக்கிழமை நான் 'பிளாட்போமில்' கடமை பார்த்துக்கொண்டு நின்றேன். பிற்பகல் 2-25 மணிக்கு யாழ்தேவி வந்து புறப்பட்டது. வண்டி கிளம்பிக்கொண்டிருக்கையில் இறந்தவர் ஒரு பார்சலுடன் வண்டியை நோக்கி எதிராக ஓடிவந்தார். பொதியைப் பெட்டிக்குள் எறிந்துவிட்டு இன்னோர் பாய்க்கட்டை ஓர் பிரயாணியிடம் கொடுத்துவிட்டு 'ஹாண்டிலில்' பிடித்துக்கொண்டு ஏற முயன்றார். அப்பொழுது பிளாட்பாரத்துக்கும் வண்டிக்குமிடையில் தவறி விழுந்தார்.

யாழ்தேவி 75 யார்வரை சென்று நின்றது. இதே நேரத்தில் அவரது தலைக்கு மேலால் வண்டி சென்றுவிட்டது. தலை முற்றுகச் சிதறுசின்னமாகக் கிழிந்துவிட்டது. இதனால் உடம்பின் பலவிடங்களிலும் காயங்கள் ஏற்பட்டிருந்தன. 137 ரூபாவுடன் ஒரு 'பெர்ஸ்'சும் பவுண்டன் பேனா, பாஸ்புத்தகம், கைக்கடிகாரம் ஆகியனவற்றையும் எடுத்தேன்.

புகையிரத நிலைய அதிபர் திரு. சின்னத்தம்பி வினாசித்தம்பியும் மேற்கண்ட மாதிரியே சாட்சியமளித்தார்.

இறந்தவரின் மாமியாரான திருமதி பூரணம் விநாசித்தம்பி தேம்பித்தேம்பிஅழுதுகொண்டு சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

கடந்த எட்டு மாதங்களுக்கு முன்னர்தான் இறந்தவர் எனது மகளை விவாகம் செய்து கொண்டார். எனது மகள் இப்பொழுது கர்ப்பிணியாகவிருக்கிறார். வவுனியாவிலிருந்து இன்று காலை வீட்டுக்கு வந்து மதிய போசனத்தை முடித்துக்கொண்டு திரும்பவும் வவுனியாவுக்குப் புறப்பட்டார். அவர் அங்கு காய்கறி, பாய் வியாபாரியாகவிருக்கிறார். வீட்டில் எதுவித மனஸ்தாபமும் இல்லை.

ஆறு மாதக் கர்ப்பவதியாக இருக்கும் இறந்தவரின் இளம் மனைவியான பரமேஸ்வரி சாட்சியமளிக்கும் நிலையில் இல்லை. அவர் துக்கமேலீட்டால் கூச்சலிட்டுக் கதறி அழுதுகொண்டிருந்தார். புகையிரத நிலையமே சோகக் காட்சி நிரம்பிய இடமாக மாறியிருந்தது.

திடீர் மரண விசாரணை அதிகாரி விபத்தினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## தெரிவுக் கோஷ்டி வெற்றியீட்டியது

காங்கேசன் துறை, வியாழன்
காங்கேசன் துறை நடேஸ்வராக் கல்லூரி 1-ம் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் காங்கேசன்துறை தெரிவுக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில், காங்கேசன் துறை தெரிவுக் கோஷ்டி 2 கோல்களால் வெற்றியீட்டியது.

திரு. ஆர். கலியுகவரதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

ஆசிரியருக்குக் கடிதம்

## ஆசிரியர் புதுமுறை மாற்றமும் மாற்றச் சபையும்

தங்கள் மேலான தினசரியில் சிலநாட்களுக்கு முன் ஆசிரியர் மாற்றத்தையிட்டு ஆசிரியத்தலையங்கம் எழுதியிருந்தீர்கள். தங்கள் பத்திரிகையில் ஆசிரியர் மாற்றச் சபையின் செய்திகளும் பிரசுரமாயிருந்ததை வரவேற்கிறேன்.

வருடத்தொடக்கத்தில் மாற்றப்படும் ஆசிரியர்களது பட்டியல் ஒன்று செப்டம்பர்மாதம் 15-ம் திகதிக்குப்பின் வட்டார வித்தியாதரிசிகளுக்கு அனுப்பப்படும் என்றும், அவ்விபரங்களைப்பார்த்து ஆசிரியர்கள் விருப்பமில்லாவிட்டால் அப்பீல் செய்யலாமெனவும் பத்திரிகைச்செய்தியில் காணப்பட்டது.

ஆனால் இதுவரை, வட்டார வித்தியாதரிசிகளுக்கோ, அல்லாவிட்டால் வித்தியாதிகாரிக்கோ இவ்விபரங்கள் அனுப்பப்படவில்லை. ஆனால் சிங்கள ஆசிரியர்களது மாற்றப்பட்டியல் வேறு மாகாணங்களில் வித்தியாதரிசிகளுக்கு அனுப்பப்பட்டதாக அறியக்கிடக்கின்றது.

இப்புதுமுறை மாற்றம் சிங்கள ஆசிரியர்களுக்கு மாத்திரம்தானா நடைமுறையில் வருகின்றது? தமிழ் ஆசிரியர்கள் 'பழையகுருடிகதவைத்திறவடி' என்றவாறு மாற்றக்கட்டளை பெற்று, வாய்மூடிமௌனியாக போகச்சொன்ன இடங்களுக்கு போகவேண்டியதுதானா?

சொன்னபடிசெய்யாமல் ஒரு தலைப்பட்சமாக மாற்றச்சபை நடக்குமானால் அது வெட்கப்படவேண்டியதொன்றாகும். ஒரு எம். பி. யே இப்போது இயங்கும் மாற்றச் சபையில் ஊழல்களும் நிர்வாகச் சீர்கேடுகளும் நடப்பதாகப் பட்டவர்த்தனமாகக் கூறி இருக்கின்றார்.

சகல ஆசிரியர்களதும் மாற்றத்தை நிர்வகிக்கும் மாற்றச் சபை போதிய பொறுப்புணர்ச்சியுடனும், நேர்மையுடனும் கடமை ஆற்றவேண்டும். மாற்றச்சபை இதனைக் கவனிக்க வேண்டும்.

மு. அரியரத்தினம்,
சுண்டிக்குளி.

## 6 குழந்தைகளின் தாய் நீரில் மூழ்கி மரணம்

அனுராதபுரம், வெள்ளி
சங்கிலிக்கந்தரவா குளத்தில் குளித்துக்கொண்டிருந்த ஒரு பெண் தண்ணீரில் மூழ்கி மரணமானார்

6 குழந்தைகளுக்குத் தாயான இவரது சடலத்தை இங்குள்ள கிராமவாசிகள் கண்டெடுத்தனர்.

பிரேத பரிசோதனை செய்த பரிசோதகர் விபத்தினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## காமாட்சி அம்பாள் கோஷ்டி வெற்றி

நீர்வேலி, ஞாயிறு
நீர்வேலி காமாட்சி அம்பாள் சனசமுகநிலையக்கோஷ்டிக்கும், கைதடி யூனைடெட் கிளப் கோஷ்டிக்குமிடையே சென்ற செவ்வாய்க்கிழமை மாலை காமாட்சிஅம்பாள் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான கைப்பந்தாட்டப் போட்டியில் முதல் இரு ஆட்டங்களிலும் 15-6, 15-4 புள்ளிகளைப் பெற்று காமாட்சி அம்பாள் சனசமுக நிலையக்கோஷ்டி வெற்றிபெற்றது.

10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?
டொலர்
ALUMINUM INDUSTRIES (CEYLON) LTD.
DOLLAR BRAND
பவுண் அடையாளம் உள்ள அலுமினியப் பாத்திரங்களே!
ஏன்?
டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது!
டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!
டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!
எல்லாவற்றிற்கும் மேல்
உங்கள் தாய்ப் பொன்னாட்டில் மாவிட்டபுரத்தில் நவீன முறையில் செய்யப்படுவது!
டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்
டொலர் மாத்திரமே உத்தரவாதமானது!
தயாரிக்குமிடம்:
அலுமினியம் இன்டஸ்ட்ரீஸ் லிமி.,
மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்.
D. 3

குனேகா சென்டுகள்
வாழ்க்கை மலர்ச்சியுற உலகப் புகழ்பெற்ற
குனேகா மருக்கொழுந்து உபயோகித்து ஆனந்தமடையுங்கள்
தயாரிப்பவர்கள்:
குனேகா அடையார்
மதராஸ் 20.
இலங்கை சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதி அன் கோ,
குருதெனியா.

## அம்பம் பிரசவசாலை

உடுப்பிட்டி, சனி

"ஏறக்குறைய 7000 பேர் வாழும் கரவெட்டி. மேற்கு, கிழக்கு, வடக்கு, கரணவாய் ஆகிய கிராமங்களுக்கு ஒரே பிரசவ மருத்துவசாலையாக விளங்கும் அம்பம் பிரசவசாலை மிகவும் கேவலமான நிலையில் இருப்பது வருந்தத்தக்கது. குடிதண்ணீர், சுத்தமானகாற்று முதலியன இல்லை. சுவர்கள் ஆங்காங்குப் பழுதடைந்துள்ளன. ஆங்காங்கு ஒழுக்குகளும் காணப்படுகின்றன."

இவ்வாறு கட்டைவேலிக் கிராமசபை அங்கத்தவர் சிலரும் வேறு பிரமுகர்களும் இன்று யாழ்ப்பாண வைத்திய அதிகாரிக்கு அனுப்பியுள்ள அவசர மகஜர் ஒன்றில் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் இவற்றைத் தெளிவாக்குவதற்கு நேர்முகப்பேட்டியும் கோரியுள்ளனர்.

உதைபந்தாட்டம்

## சதுமலைவிவேகானந்தா வெற்றி

யாழ்ப்பாணம், சனி

சதுமலை சனசமூகநிலைய விவேகானந்தா உதைபந்தாட்ட 'சி' பிரிவுக் கோஷ்டிக்கும் கொட்டடி 'வேவியன்' உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் கொட்டடி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் சதுமலை விவேகானந்தா வெற்றி பெற்றது.

வெற்றிபெற்ற கோஷ்டிக்கு வெள்ளிக்கிண்ணம் வழங்கப்பட்டது.

திரு. எஸ். முத்துக்குமாரு மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## சுதேசிப் பொருட்களுக்கு கிராக்கி

காத்தான்குடி, வெள்ளி

சமீபத்திலேற்பட்ட சிகரட்டின் விலையுயர்வு காரணமாகப் பாவனையாளர் தொகை குறைந்துள்ளது. இப்பகுதியில் அநேகர் சிகரட்டுக்குப்பதில் சுருட்டு, பீடி ஆகியவற்றைப் பாவிக்க முன்வந்துள்ளனர்.

## பருப்பு வியாபாரம் அரசாங்கம் ஏற்கும்?

மத்துகம, வியாழன்

தற்பொழுது தனியார்களின் கையிலிருக்கும் பருப்பு இறக்குமதி வியாபாரத்தையும் கருவாட்டைப்போன்று அரசாங்கம் எடுத்து நடத்தவிருக்கின்றது. பருப்பு இறக்குமதியையும், விற்பனையையும் அரசாங்கம் பொறுப்பேற்ருல் வருடமொன்றுக்கு சுமார் ஐம்பது லட்சம் ரூபாய் இலாபம் கிடைக்கலாமென காணி, நில அபிவிருத்தி அமைச்சர் திரு. சி. பி. டி' சில்வா களுத்துறையை அடுத்த வஸ்கடுவையில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

## "சிவனடிபாத நிர்வாகம் ஒரு சபையிடமிருக்கவேண்டும்"

### பௌத்த சாஸனக் கமிஷன் சிபார்சு

கொழும்பு, வெள்ளி

பௌத்த கமிஷன் அறிக்கை பற்றி ஆராய நியமிக்கப்பட்ட பௌத்த சாஸனக் கமிஷன், தன் அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறது. சாஸன மண்டலம் நியமிக்கப்பட்டதும் பிக்குகள் பதிவுசெய்யப்பட வேண்டும் என்று அது சிபார்சு செய்துள்ளது.

சிவனடிபாதம், தலதா மாளிகை ஆகியவற்றின் நிர்வாகம் தனித்தனி சபைகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் அது சிபார்சு செய்திருக்கிறது.

15 பேரைக்கொண்ட இக் கமிஷன் 1957-ம் ஆண்டு நியமிக்கப்பட்டது. பிக்குகள் உட்பட 667 பேர் கமிஷன் முன் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறினர். பர்மா, ஸயாம், கம்போடியா, லாவோஸ் ஆகிய நாடுகளுக்குக் கமிஷன் சென்று அங்குள்ள பௌத்த நிர்வாகம் பற்றி ஆராய்ந்தது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**திங்கள் 2-10-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை 8-00 வீணை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வாத்தியக்கோஷ்டி.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 ஏ. நமசிவாயம்-புல்லாங்குழல், 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 'காந்திதினம்' - பேச்சு, 9-30 என். கே. பத்மநாதன் - பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 வாழிய காந்தி மஹாத்மா - இசைநிகழ்ச்சி.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 துதிப்பாடல்கள், 1-30 வாத்திய இசை, 1-50 குரல்இசை, 2-10 பி. ஞானம் நாராயணசுவாமி - பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-15 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்:

இரவு 7-35 நல்லுரை, 8-00 சத்தியகங்கை, 8-30 பி. ஞானம் நாராயணசுவாமி - பாட்டு, 9-15 எஸ். ஆர். எச். சுந்தரேசன் - பேச்சு.

## நாவலப்பிட்டியில் நீர்கொழும்பு வீரர் தோல்வி

நாவலப்பிட்டி, வெள்ளி

நாவலப்பிட்டி மைதானத்தில் நீர்கொழும்பு ஜுபிட்டர்ஸ் கோஷ்டிக்கும் நாவலப்பிட்டி முக்கோணப் போட்டி வீரர்களுக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் முறையே 2-4 கோல்கள் அடித்ததில் நாவலப்பிட்டி வீரர்கள் இரு கோல்களால் வெற்றியடைந்தனர். இப்போட்டிக்கு திரு எஸ். சிவலிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

நாவலப்பிட்டி ஹைரன்ஸ் கோஷ்டிக்கும் நீர்கொழும்பு கோஷ்டிக்கும் இடையில் நடைபெற்ற மற்றொரு போட்டியிலும் நீர்கொழும்பு கோஷ்டியினர் தோல்வியடைந்தனர். இதில் நாவலப்பிட்டி கோஷ்டியினர் ஒருகோல் போட்டு வெற்றியீட்டினர். நீர்கொழும்பு கோஷ்டியினர் ஒரு கோலும் போடவில்லை. இப்போட்டிக்கு திரு. காமினி ராஜபக்ஸ மத்தியஸ்தம் வகித்தார்.

மத்துகம, சனி

வியாங்கலைப் பகுதியில் றப்பர் தோட்டத்தில் மேய்ந்து கொண்டிருந்த ஆடு ஒன்றைப் பிடித்து மலைப்பாம்பு விழுங்கியது. ஆடு சத்தமிடவே சத்தத்தைக்கேட்டு ஓடிவந்த வியாங்கலை போஸ்ட்மாஸ்டர் திரு. மக்கீன் பாம்பை துப்பாக்கியால் சுட்டுக்கொன்ருர். ஆனல் ஆடும் இறந்தது. பாம்பும் இறந்தது.


நான் விரும்புவது

நெஸ்டோமோல்ட்

அது எனக்கு
எவ்வளவோ
நன்மையளிக்கின்றது...






குழந்தைகள், வாலிபர், குடும்பப் பெண்கள் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும்இந்த நெஸ்டோமோல்ட் அபார நன்மை அளிக்க வல்லது. சூடானுலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானுலென்ன, இழந்த சக்தியை மீட்டுத் தரவும் ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்ருல், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பதுதான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி ரகம்.

நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம், இது மோல்ட்டட் பார்லி மற்றும் கோதுமை மாவுடன் முழுப் பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும், இதில் விட்டமின் A, B2, மற்றும் B அதோடு கல்ஸியம், மக்னீஸியம், ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள் மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 மேலதிக விட்டமின் B சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்

**நெஸில்ஸ்**

**இலவச சாம்பிள்**

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப் பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில்ஸ் புரோடக்ட்ஸ்
(சிலோன்) லிமிடெட்
த. பெ. 189,
கொழும்பு.

**நெஸ்டோமோல்ட்**

விட்டமின் B அடங்கியது.

## கலை அரங்கம்

# வெள்ளிக்கிழமை ராகினி வருகிறார்

திருவாங்கூர் சகோதரிகளில் 'கடைக்குட்டி'யான குமாரி ராகினியும் அவரது நடனக் குழுவும் வெள்ளிக்கிழமை கொழும்பு வந்து சேருகின்றனர்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவி நிதிக்காக அவர்களது புகழ்பெற்ற ராமாயண நாட்டிய நாடகத்தை ராகினி குழுவினர் நடித்துக் காண்பிப்பர்.

நாற்பது கலைஞர்களைக் கொண்ட இக்குழுவில் நடிகை குமாரி அம்பிகாவும் ஒருவர். மூன்று தினங்கள் ராமாயண நாட்டிய நாடகம் கொழும்பில் நடைபெறும்.

கண்டியில் ராகினியின் பரத நாட்டிய நிகழ்ச்சியொன்றும் நடைபெறுமெனத் தெரிகிறது.

## 'செல்வம்' கைவிடப்பட்டது

'செல்வம்' என்ற பெயரில் இராஜலட்சுமி பட நிலையத்தார் தயாரித்துவந்த படத்தை அவர்கள் நிறுத்திக்கொண்டனர். இதற்குப் பதிலாக புதிய ஒருபடத்தைத் தயாரிப்பார்கள்.

வயலின், மகாதேவன் தயாரிக்கும் இப் புதிய படத்தையும் சங்கரே டைரக்ட் செய்வார்.

கே. பி. கொட்டாரக்காராவின் மூலக் கதைக்கு ஜாவர் சீதாராமன் வசனம் எழுதுகிறார்.

ஜெமினி கணேசன், சரோஜாதேவி, நடிகவேள் எம். ஆர். ராதா, டி. எஸ். முத்தையா, பாலாஜி ஆகியோர் இப்படத்தில் நடிப்பார்கள்.

## பாம்புகள் இசை பாடும்

நல்ல பாம்புகள் வீணை வாசிக்கப்போகின்றன; ஷெனாயில் இன்னிசை எழுப்பப்போகின்றன. தபேலா, மிருதங்கம் ஆகியனவும் அவைகள் வாசிக்கப்போகின்றன. குதிரைகளைப் போல் பாம்புகள் தேரும் இழுக்கப் போகின்றன.

இப்புதுமையை அஞ்சலி தேவி நடித்து வரும் "நாக தேவதை" என்ற இந்திப் படத்தில் காணமுடியும்.

இதற்காக இப்படத் தயாரிப்பாளர் சௌராஷ்டிரத்திலிருந்து 30 நல்ல பாம்புகளைக் கொண்டுவந்து பயிற்சியளித்து வருகிறார்.

## இந்தியில் 'மீண்ட சொர்க்கம்'

ஸ்ரீதர் கதை வசனமெழுதி டைரக்ட் செய்த மதுரம் பிக்சர்ஸ் "மீண்ட சொர்க்கம்" இப்பொழுது இந்தியில் 'டப்' செய்யப்பட்டுவருகிறது.

"ஜும்பஜே பாலியன்" என்ற பெயரில் இப்படம் வெளிவரும்.

## சௌகார் ஜானகி

சென்ற இரு வாரங்களாக உடல்நலக் குறைவினால் ஓய்வெடுத்து வந்த நடிகை சௌகார் ஜானகி மீண்டும் படப்பிடிப்பில் கலந்துகொண்டார். தெலுங்கில் தயாராகும் 'குமுதம்' படத்தில் அவர் குருட்டுப் பெண்ணாக நடிக்கிறார்.

## பஞ்சாபி படத்தில் ராகினி

தமிழ், மலையாளம், இந்தி மொழிப் படங்களில் நடித்துள்ள நாட்டிய நடிகை ராகினி பஞ்சாபி மொழிப் படத்திலும் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

அசோக்குமார் கதாநாயகனாக நடிக்கும் "பட்டோலா" என்ற பஞ்சாபி படத்தில் தான் ராகினி கதாநாயகியாக நடிக்கிறார். பஞ்சாபி மொழிப் படத்தில் நடிக்கும் முதல் தென்னிந்திய நடிகை ராகினிதான்.



## 100 படங்களுக்குமேல் நடித்துவிட்டார்

புகழ்பெற்ற தெலுங்கு, தமிழ்த் திரை நடிகர் ஏ. நாகேஸ்வரராவ் 100 படங்களுக்குமேல் நடித்துவிட்டார்.

நீண்ட நாட்களாக கதாநாயகனாக நடித்து ஆந்திர மக்களின் பாராட்டைப் பெற்ற நடிகர் நாகேஸ்வரராவ் 'தேவதாஸ்' படத்தின் மூலம் பெரும் புகழ் பெற்றார்.

சென்ற 15 ஆண்டுகளுக்கு மேல் அவர் திரைப்படங்களில் நடித்துள்ளார்.

## 'பனித்திரை' முடிவடைகிறது

'முக்தா' பிலிம்ஸ் பனித்திரைக்கான இறுதிக் காட்சிகள் படமாக்கப்பட்டு வருகின்றன. இப்படத்திற்கான வெளிப்புறக் காட்சிகள் சமீபத்தில் வைகை அணைக்கட்டிலும் கொடைக் கானலிலும் படமாக்கப்பட்டன.

தங்கவேலுவும் எம். சரோஜாவும் தோன்றும் நகைச்சுவைக் காட்சிகளும் சமீபத்தில் படமாக்கப்பட்டன.

சரோஜா தேவியும் ஜெமினி கணேசனும் முக்கிய பாகத்தில் நடித்துவரும் 'பனித் திரை'யில் எஸ். வி. சுப்பையா பிரதான பாகத்தில் நடிக்கிறார்.

இப்படம் தீபாவளிக்கு வெளிவரும்.

## அறிவித்தல்

மூளாய் ஆஸ்பத்திரித் தலைவர் டாக்டர் சாக்கோ அவர்கள் இம்மாத முடிவில் ஓய்வு பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

நாற்பது ஆண்டுகளாக இவ்வூர் மக்களுக்கு அவர் ஆற்றிய அரிய சேவையைப் பாராட்டும் பொருட்டு எத்தகைய கொண்டாட்டங்களை உருவாக்க வேண்டும் என்பது பற்றி ஆலோசிப்பதற்கு, அவருடைய அன்பர்களும் நண்பர்களும் 7—10—61 சனிக்கிழமை பி. ப. 4-00 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கூடுவார்கள். அக் கூட்டத்துக்குச் சமுகமளிக்குமாறு டாக்டர் சாக்கோவின் நண்பர்கள், அன்பர்கள் யாவரையும் வேண்டிக் கொள்ளுகின்றேன்.

Dr. N. T. சம்பந்தன்,
கூட்ட அழைப்பாளர் சார்பாக.
ஆஸ்பத்திரி,
மூளாய். 2-10-61.

# "பகத்சிங்" பாத்திரத்தில் நடிக்க சிவாஜி விருப்பம்

இந்திப் படத்தில் நடிப்பதற்கு நடிகர் திலகம் சிவாஜி கணேசன் விருப்பம் தெரிவித்துள்ளார்.

"இந்திப் படத்தில் நடிப்பதாக இருந்தால் ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கெதிராகப் புரட்சி செய்து தூக்கிலிடப்பட்ட விடுதலை வீரன் பகத் சிங்கின் பாத்திரத்தில் நடிக்கவே விரும்புகிறேன்" என்று சிவாஜி கணேசன் பம்பாயில் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

"வீரபாண்டிய கட்டபொம்மன்", "கப்பலோட்டிய தமிழன்" போன்ற தமிழக விடுதலை வீரர்களின் பாத்திரங்களை ஏற்று நடித்துள்ள சிவாஜி கணேசன், "பகத் சிங்கின் பாத்திரத்தை ஏற்று நடிப்பதில் பெருமையடைவேன்" என்று கூறினார்.

இந்திப் படத்தில் நடிக்க வேண்டுமென்பதே தமது விருப்பமென்றும் ஆனால் தமது நேரத்தில் பெரும்பகுதி தமிழ்ப் படங்களில் நடிப்பதில் செலவாகி விடுவதால் இந்திப்படங்களில் நடிக்க இயலவில்லையென்றும் சிவாஜி தெரிவித்தார்.



## 'பொக்கிஷம்'

ஸ்ரீமகள் பட நிலையத்தாரின் "பொக்கிஷம்" வளர்ந்து வருகிறது. எம். ஆர். ராதா, நம்பியார், சத்தியம், சாந்தி, ஜி.சகுந்தலா ஆகியோர் இதில் நடித்து வருகிறார்கள்.

## கடன்காரனை துரத்தினர் தங்கவேலுவும் ராதாவும்!

'பத்மா' படநிலையத்தாரின் 'வளர்பிறை' துரிதமாக வளர்ந்துவருகிறது. நடிகவேள் எம். ஆர். ராதாவும் தங்கவேலுவும் நடித்த நகைச்சுவைக் காட்சிகள் சில சமீபத்தில் படமாக்கப்பட்டன

தீயவன் வேலுவின் பாகத்தில் ராதாவும், ராதாவின் தீய செயல்களுக்குத் தூண்டும் கோளாக விளங்கும் மணியாக தங்கவேலுவும் நடிக்கின்றனர்.

கடன்காரனை இருவரும் மிரட்டி வெளியே துரத்தும் ஒரு காட்சியும் சமீபத்தில் படமாக்கப்பட்டது.

திருக்குறளைப் படித்து திருந்தி, வாழ்க்கை நடத்தும் வேலுவின் பாகத்தில் நடிகவேள் நடிக்கிறார்.

சிவாஜி கணேசன், சரோஜா தேவி, டி. எஸ். பாலையா, புதுமுகம் லீலாவதி ஆகியோர் நடித்து வரும் 'வளர் பிறை'யை யோகானந்த் டைரக்ட் செய்கிறார்

## புதிய படத்தில் ஜெமினி - சாவித்திரி

வீனஸ் பட நிலையத்தின் பங்குதாரர்களில் ஒருவரான திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி சொந்தத்தில் ஒரு சமூகப் படத்தைத் தயாரிக்கவிருக்கிறார். 'வசுமதி' பட நிலையம் என்ற பெயரில் தொடங்கப்பட்டுள்ள இப்பட நிலையத்தார் தயாரிக்கும் முதல் படத்தில் ஜெமினி கணேசனும் சாவித்திரியும் ஜோடியாக நடிக்கின்றனர். நடிகவேள் ராதா, ரங்கராவ், கே. மாலதி ஆகியோரும் இப்படத்தில் நடிப்பர். திரைக்கதை வசனத்தை எம். எஸ். சோலைமலை எழுதுவார்.

## 'வடிவுக்கு வளை காப்பு'

'இலட்சுமி' படநிலையத்தாரின் 'வடிவுக்கு வளை காப்பு' மீண்டும் வேகமாக வளரத் தொடங்கியுள்ளது.

சிவாஜிகணேசன், சாவித்திரி, சௌகார் ஜானகி, குலதெய்வம் ராஜகோபால், வி. கே. ராமசாமி, மனோரமா ஆகியோர் இப்படத்தில் நடிக்கின்றனர்.

திரைக் கதை வசனத்தை எழுதியுள்ள ஏ. பி. நாகராஜனே இப்படத்தை டைரக்ட் செய்கிறார்.

## பத்மினி

பத்மினியின் கடைசி இந்திப் படமான "ஆவிக்"கில் தமது பாகங்களை பத்மினி நடித்து முடித்துவிட்டார்.

## யாழ்ப்பாணத்தில் சுவாமி சச்சிதானந்த

யாழ்ப்பாணம், ஞாயிறு.

இலங்கை திவ்ய ஜீவனசங்க ஸ்தாபகரும். போஷகரும், ஹிமாலயம் ஸ்வாமி சிவானந்த மகாராஜின் உத்தம சிஷ்யருமான உயர் திரு ஸ்வாமி சச்சிதானந்த யோகிராஜ் இப்போது யாழ்ப்பாணத்தில் தங்கி இருக்கிறார். யாழ்ப்பாணத்தில் அவர் தங்கியிருக்கும் காலத்தில் பல இடங்களில் அறிவுரை வழங்குவார்கள். ஸ்வாமிஜி கலந்து கொள்ளவிருக்கும்முக்கியமான சில நிகழ்ச்சிகள் பின்வருமாறு:-

2-10-61 திங்கள் மாலை6மணி: யாழ் நகரசபை மண்டபத்தில் ஸ்ரீ சிவானந்த ஜயந்தி விழா.

3-10-61 செவ்வாய்: காலை 9-30 மணி உபந்நியாசம்- திருநெல்வேலி சைவ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை. மாலை 3-30 மணிக்கு உபந்நியாசம்-மானிப்பாய் இந்துக்கல்லூரி. மாலை 6 மணிக்கு உபந்நியாசம் யாழ்ப்பாணம் ரோட்டரி கிளப்.

4-10-61 புதன்: காலை 6-30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் ஆசனப் பயிற்சி. காலை 9-30 மணிக்கு ஊரெழு கணேசவித்தியாசாலையில் உபந்நியாசம்.

5-10-61 வியாழன் காலை 6-30 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் ஆசனப் பயிற்சி. மாலை 6 மணிக்கு உரும்பிராய் ஞானவைரவர் கோவிலில் உபந்நியாசம்.

6-10-61 வெள்ளி: மாலை 5 மணிக்கு காங்கேசன் துறை சிமெந்துத் தொழிற்சாலையில் உபந்நியாசம்,

6-10-61 வெள்ளிக்கிழமை மாலை 7-30 மணி தொடக்கம் 8-10-61 ஞாயிறு இரவு 10மணி வரை கீரிமலையில் ஸ்வாமிஜி தலைமையில் அந்தர்யோகம் நடைபெறும்.


மகத்தான 2-வது மாதம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜிதா (மஸ்கேலியா)
நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)
ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை) மொடர்ன் (பதுளை)
லக்ஷ்மி (இரத்தினபுரி) தீவொளி (நுவரேலியா)



சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
எம். ஆர்: ராதா
சாவித்திரி
நடித்த

பாவ மன்னிப்பு

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி மாலை6-30 க்கும் இரவு 9-30 க்கும்

சிவாஜி கணேசன் - பத்மினி
நடித்த
அமர தீபம்

Monday to Thursday 2-nd to 5-tn 4-30 p.m.
ONE FOOT IN HELL


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.